வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P.1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 21.07.2025 திங்கட்கிழமை இதழ் : 202 பக்கங்கள் : 12




# நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கத் தயாராகின்றது அரசாங்கம்!

## திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 21

அரசாங்கம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கத் தயாராகி வருவதாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது கடந்த கால தேர்தல் பிரசாரத்தின் போது தற்போதைய ஆட்சியாளர்களால் மக்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு முக்கிய வாக்குறுதியாகும்.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தார்.

இருப்பினும், அரசியலமைப்பு வரைவுக் குழுவை நியமிப்பதோ அல்லது அது தொடர்பான எந்தவொரு ஆரம்ப வேலைகளோ இதுவரை செய்யப்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையில், நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான ஒரு திட்டத்தை சமர்ப்பிக்க ஜனாதிபதி தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், அரசாங்கம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க வில்லை என்றால், எதிர்க்கட்சி ஏற்க னவே அந்த திட்டத்தை ஒரு தனிநபர் பிரேரணையாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. (அ)

## கோழி இறைச்சி விலை உயர்வு

கொழும்பு, ஜூலை 21

தற்போது கோழி இறைச்சியின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி 1,300 ரூபாவை விடவும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கோழி இறைச்சி விற்பனை செய்யப்படும் வர்த்தக நிலையங்களில் 1,100 ரூபா, 1,200 என பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. நிர்ணயிக்கப்பட்ட விலையில் தற்போது கோழி இறைச்சி விற்பனை செய்யப்படுவதில்லை.

எனவே, கோழி இறைச்சிக்கு உரிய விலையை நிர்ணயித்து விற்பனை செய்வதுடன், விலையையும் குறைக்குமாறு நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், இந்த விலை உயர்வு குறித்து இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகரவிடம் விசாரித்தபோது, வார இறுதியில் இறைச்சியின் விலை ஓரளவு அதிகரித்துள்ளதை உறுதி செய்துள்ளார். (அ)



## வட்டுக்கோட்டையில் பதற்றம் இரு குழுக்களிடையே மோதல்

### பொலிஸார் துப்பாக்கிச் சூடு

- பு.கஜிந்தன், த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணத்தில் இரு குழுக்கள் வன்முறையில் ஈடுபட்ட நிலையில் . பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு வன்முறையை கட்டுப்படுத்தியுடன் , வன்முறையில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் இருவரை கைது செய்துள்ளனர். 11

## ராஜபக்ஷக்களுக்கு மின்சார கதிரை தமிழகத் தலைவர்களுக்கு கச்சதீவு!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க விமர்சனம்

கொழும்பு, ஜூலை 21

"இலங்கையில் மின்சாரக் கதிரை கதைகூறி ராஜபக்சக்கள் அரசியல் நடத்தியதுபோல, தமிழக முதல்வர் கச்சதீவு விவகாரத்தை கையிலெடுத்துள்ளார்." - என்று சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கச்சதீவு விவகாரம் தொடர்பில் தமிழக முதல்வர் வெளியிடும் கருத்துகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதில்லை.

ஏனெனில் தமிழகத்தில் எழும் பிரச்னைகளை திசைதிருப்புவதற்காக இவ்விவகாரம் பயன்படுத்தப்படலாம்.

தமிழக முதல்வருக்கு , மகிந்த ராஜபக்ஷ போல் மின்சார கதிரையை வைத்து அரசியல் நடத்தும் சூழ்நிலை 11

## அதிக விலைக்கு விற்றால் அரிசி இறக்குமதியாகும்!

### விவசாய அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 21

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வதற்கு முயற் சிகள் எடுக்கப்படுமாயின், வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படும் என 11

## செம்மணி மனிதப் புதைகுழியை தோண்டுவதால் இன வன்முறை!

### எச்சரிக்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜூலை 21

செம்மணி மனிதப் புதைகுழியைத் தோண்டுவது மீண்டும் இன வன்முறைக்கு வழிவகுக்கும் என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடந்த மண்ணில் எங்கு தோண்டினாலும் மனிதப் புதைகுழிகள் இருக்கத்தான் செய்யும் எனவும் செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணி மேற்கொள்வது தேவையற்றது எனவும் அவர் கூறினார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு 11

## பிள்ளையான் தொடர்பான முக்கிய விடயங்கள் விரைவில் நீதிமன்றுக்கு!

### அமைச்சர் ஆனந்த விஜேபால

கொழும்பு, ஜூலை 21

பிள்ளையான் எனப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தொடர்பான சில விடயங்கள் விரைவில் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் ஆனந்த விஜேபால ஏப்ரல் 21 தாக்குதல்கள் குறித்து பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்ற விடயத்தை நான் அண்மையில் 11

## அரியாலை மனிதப் புதைகுழியின் 2ஆம் கட்ட அகழ்வு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 21

யாழ்ப்பாணம் அரியாலை சித்துப்பாத்தி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் இரண்டாவது அமர்வு இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

முன்னதாக, விடயம் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் தொல்லியல் துறை பேராசிரியர் ஆகியோரின் சமர்ப்பணங்களை ஆராய்ந்த யாழ் நீதவான் நீதிமன்றம், அகழ்விற்கான இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

இந் நிலையில், இன்று முதல் 15 நாட்களுக்கு அரியாலை சித்துப்பாத்தி மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை, மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின், முதலாவது அமர்வு அகழ்வுப் பணிகளின் போது 65 என்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் இதில் சிறுவர்கள் மற்றும் 11

## உள்ளூராட்சி சபைகளில் கடந்த தேர்தலை விட இம்முறை பெண்கள் தெரிவில் பெரும் வீழ்ச்சி!

கொழும்பு, ஜூலை 21

2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு பெண்கள் இல்லாத உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

இம்முறை மொத்தம் 49 சபைகளில் ஒரு பெண் கூடத் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனத் தேர்தல் ஆணைக்குழு வெள்ளிக்கிழமை தெரிவித்தது. 2018 ஆம் ஆண்டு 16 சபைகளில் மட்டுமே பெண்கள் தெரிவாகவில்லை.

தற்போது பல உள்ளூராட்சி மன்றங்களில் எந்த பெண் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. கொழும்பு மற்றும் களுத்துறையில் தலா ஒரு சபையிலும், கண்டியில் மூன்று சபைகளிலும், நுவரெலியாவில் இரண்டு சபைகளிலும் பெண்கள் தெரிவாகவில்லை. தென் மாகாணத்தில், காலி மற்றும் மாத்தறையில் தலா இரண்டு சபைகளில் பெண்கள் இல்லை.

வடக்கில், யாழ்ப்பாணத்தில் நான்கு சபைகளிலும், 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாண்டிக்குளம் மாடு அறுக்கும் மடுவத்தில் பல திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்

## வவுனியா மாநகர சபை முதல்வர்

வவுனியா, ஜுலை 21

வவுனியா தாண்டிக்குளத்தில் உள்ள மாடு அறுக்கும் மடுவம் தொடர்பாக பல்வேறு திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் அங்கு பல பிரச்னைகள் உள்ளதாகவும் இதனை அரசியல் ஆக்குவது பர்ஸ்சான் தலைமையிலான அரசியல் கட்சியே எனவும் வவுனியா மாநகர சபை முதல்வர் சு.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

மடுவத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னை தொடர்பாக கருத்து கேட்டபோதே முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சார சபையால் இதுவரை அனுப்பப்பட்ட பட்டியலுக்கு அமைய திங்கள்கிழமை நிலுவையிலுள்ள மின் கட்டணத்தை செலுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

அந்த செயற்பாடுகளைச் சபையின் நிர்வாக அதிகாரியே செய்கின்றார். இதனை அரசியல் ஆக்குவது பர்ஸ்சான் தலைமையிலான அரசியல் கட்சியே.

தாண்டிக்குளம் மாடு அறுக்கும் மடுவத்தில் அதிகமான மாடுகள் அறுக்கப்படுகின்றன.

அவை வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவதால் எமது மாவட்டத்தில் மாடுகளின் விலை அதிகரித்துள்ளது.

கால்நடைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன் களவாடப்படுகின்றது.

அண்மையில்கூட ஓமந்தையில் ஒருவருக்கு சொந்தமான 20 மாடுகள் களவாடப்பட்டுள்ளன.

எனவே இவற்றை தடுப்பதற்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும்.

அத்துடன் மடுவத்தில் அறுக்கப்படும் ஒரு கிலோ மாட்டு இறைச்சிக்காக சபைக்கு 10 ரூபாவே கட்டணமாக செலுத்தப்படுகின்றது.

கடந்த 25 வருடங்களாக இந்த தொகையே அறவிடப்படுகின்றது. ஆனால் தேறிய இலாபமாக குறைந்தது கிலோக்கு 800 ரூபாவை அவர்கள் பெறுகின்றனர்.

எனவே இவற்றை திருத்தி சபையின் வருமானத்தை அதிகரிக்கவேண்டும்.

அந்த வகையில் பர்ஸ்சாவின் நடவடிக்கை தொடர்பாக மாநகர சபையின் அடுத்த அமர்வில் கூடி கலந்துரையாடப்பட்டு ஒழுக்காற்று முடிவுகள் எடுக்கப்படும்.

ஒரு மாநகரசபை உறுப்பினர் சபையின் வியாபரத்தை தன்னுடையது என்று சொல்லி செய்யமுடியாது.

சபை உறுப்பினராக சத்தியப்பிரமாணம் எடுக்கும் முன்னரே அவர் அதனை வேறு ஒருவருக்கு மாற்றிக்கொடுத்திருக்க வேண்டும்.

எனவே அவர் மக்களுக்காக அல்ல மாடுகளை வெட்டுவதற்காகவே மாநகரசபைக்கு வந்துள்ளாரா என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது - என்றார். (அ)

# புதுக்குடியிருப்பு றோ.கவில் மாணவர்களின் கண்காட்சி

முல்லைத்தீவு, ஜுலை 21

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு சிறப்பாக இடம் பெற்றது.

வித்தியாலய அதிபர் அருட்பணி றொபின்சன் யோசிங் தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது.

இக்கண்காட்சி நிகழ்வை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் நேவிற் ஜீவராசா ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது மாணவர்களின் கைவண்ணங்களால் உருவாக்கப்பட்ட ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டதோடு பல்வேறு தரப்பினரும் கண்காட்சியைப் பார்வையிட்டு மாணவர்களை ஊக்குவித்தனர்.

தொடர்ந்து பாடசாலை அதிபர், பிரதி அதிபர், பகுதி தலைவர் ஆகியோரால் கண்காட்சி தொடர்பான கருத்துரைகள் முன்வைக்கப்பட்டன.

இக்கண்காட்சியானது ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள், ஆரம்ப பிரிவு மாணவர்கள், பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சி நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் என பலர் பங்கேற்றனர். (அ)

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் வடக்கு கிழக்கின் தலைவியாக கனகரஞ்சினி

யாழ்ப்பாணம், ஜுலை 21

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் நிர்வாகத் தெரிவும் கலந்துரையாடலும் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதன் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க வடக்கு கிழக்கின் தலைவியாக யோகராஜா கனகரஞ்சினியும், செயலாளராக சி.ஜெனிற்றாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட தலைவராக சி.இளங்கோதையும், மட்டக்களப்பு மாவட்ட தலைவராக வ.அமலநாயகியும், அம்பாறை மாவட்ட தலைவராக வ.செல்வராணியும், திருகோணமலை மாவட்ட தலைவராக எஸ்.செபஸ்ரியான்தேவியும், வவுனியா மாவட்ட தலைவராக சி.ஜெனிற்றாவும், முல்லைத்தீவு மாவட்ட தலைவராக ப.வீரமணியும், கிளிநொச்சி தலைவராக க.கோகிலவாணியும், மன்னார் மாவட்ட தலைவராக கு.உதயசந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

# கிளிநொச்சி பிரமந்தனாறு வட்டார அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

கிளிநொச்சி, ஜுலை 21

கிளிநொச்சி மாவட்டம் பிரமந்தனாறு வட்டார அபிவிருத்தி தொடர்பாக, தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ம.மோகன் தலைமையில், பிரமந்தனாறு வட்டாரத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு இடையில் நேற்று கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடல் பிரமந்தனாறு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது வட்டாரத்தின் அபிவிருத்தித் தேவைகள் தொடர்பாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

# அல்லைப்பிட்டியில் புதர்களுக்கு தீ!

யாழ்ப்பாணம், ஜுலை 21

அல்லைப்பிட்டி அலுமினிய தொழிற்சாலை பகுதியிலுள்ள காணிகளில் காணப்பட்ட புதர்களுக்கு விசமிகள் தீ வைத்தமையால் வீதியால் மக்கள் செல்ல முடியாத நிலை உருவானது.

பற்றி எரிந்த புதர்களால் ஏற்பட்ட புகை மூட்டத்தால் ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன் வீதியால் போக்குவரத்தில் ஈடுபட்ட மக்கள் சுவாசிக்க முடியாத நிலையும் ஏற்பட்டது.

மேலும் குறித்த புகை மூட்டத்தால் மோட்டார் சைக்கிளில் சென்ற சிலர் விபத்துக்குள்ளாகி யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் பிரதேச சபை தவிசாளருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் யாழ் மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் வரவழைக்கப்பட்டு தீயை கட்டுப்படுத்தும் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த சம்பவம் இடம் பெற்ற இடத்துக்கு மாவட்ட மேலதிக அரச அதிபர் கை. சிவகரன் கள விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இராமநாதபுரத்தில் ஆடிப்பிறப்பு நிகழ்வு

கிளிநொச்சி, ஜுலை 21

கிளிநொச்சி இராமநாதபுரத்தில் ஆடிப்பிறப்பு நிகழ்வும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வும் இடம்பெற்றது.

இராமநாதபுரம் கிராம மாதர்சங்கம், லக்சுமி கரங்கள் அமைப்பு, கிளிநொச்சி இளையோர்களின் எதிர்காலம் அமைப்பு என்பவற்றின் ஆதரவுடன் ஆடிப்பிறப்பு நிகழ்வும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வும் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் இராமநாதபுரம் வட்டார பிரதேச சபை உறுப்பினர் முத்து சிவமோகன், கல்மடு நகர் வட்டார பிரதேச சபை உறுப்பினர் இராசையா யோகநாதன், கிராம மக்கள், கிராமத்தின் இளைஞர் யுவதிகள், கிராமத்தின் பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

கிளித்தட்டு, சங்கீத கதிரை உள்ளிட்ட விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன. (அ)

# படகு, வெளி இணைப்பு இயந்திரம் கடலில் வைத்து எரியூட்டப்பட்டன

மன்னார், ஜுலை 21

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தில் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீனவர் ஒருவருடைய பல இலட்சம் ரூபா பெறுமதியான மீன் பிடி படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவை கடலில் வைத்து எரியூட்டப்பட்ட நிலையில் அடம்பன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விடத்தல் தீவு கடற்கரையில் கடந்த சில தினங்களாக நிறுத்தி வைக்கப்பட்ட மீன்பிடிப் படகின் வெளி இணைப்பு இயந்திரம் இனம் தெரியாத நபர்களினால் இரவு நேரங்களில் கடலில் தூக்கி வீசப்பட்டு வந்த நிலையில், குறித்த வெளி இணைப்பு இயந்திரங்களை மீட்டு மீனவர்கள் கடல் தொழிலுக்குச் சென்று வந்துள்ளனர்.

இந்த நிலையில் விடத்தல் தீவு மேற்கு மீனவ கூட்டுறவுச் சங்கத்தின் பொருளாளர் கடந்த வெள்ளிக்கிழமை மீன்பிடிக்க கடலுக்குச் சென்று மீண்டும் படகு விடத்தல் தீவு கடற்கரையில் கட்டப்பட்டது.

குறித்த படகில் பெறுமதியான வெளி இணைப்பு இயந்திரமும் பொருத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை மீண்டும் தொழிலுக்குச் செல்ல குறித்த படகின் உரிமையாளர் கடற்கரைக்குச் சென்றபோது படகை காணவில்லை.

இதன் போது குறித்த படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவை சற்று தொலைவில் எரியூட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக குறித்த மீனவர் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் அடம்பன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பின்னர் தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் குறித்த பகுதிக்கு சென்று எரியூட்டப்பட்ட படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவற்றை பார்வையிட்டதோடு, விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சம்பவம் விடத்தல் தீவு மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# கரைச்சி பிரதேச இளைஞர் சம்மேளன நிர்வாகத் தெரிவு

கிளிநொச்சி, ஜுலை 21

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நிர்வகிக்கப்படுகின்ற இளைஞர் கழகங்களுக்கான கரைச்சி பிரதேசத்துக்குரிய இளைஞர் கழக சம்மேளனத்தின் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவுகள் நேற்று இடம்பெற்றன.

கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ஜெ.சுகந்தன் நிகழ்வு இடம்பெற்றது.

நிர்வாக தெரிவு மற்றும் கலந்துரையாடலில் கரைச்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட சகல கழகங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் விருந்தினர்களாக தேசிய இளைஞர் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட உதவி பணிப்பாளர் ஐ.தேவேந்திரன், தேசிய இளைஞர் மன்றத்தில் கடந்த கால செயற்பாடுகளில் ஈடுபட்ட முன்னாள் இளைஞர்கள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் பாடசாலைக்குச் சீருடைகள்

யாழ்ப்பாணம், ஜுலை 21

வடமராட்சி தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா பூவரசங்குளம் ஸ்ரீ பாலமுருகன் ஆலய அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கின்ற 30 மாணவர்களுக்கு 70 ஆயிரம் ரூபா பெறுமதியான சீருடைகள் வழங்கப்பட்டன.

குறித்த சீருடைகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், அறநெறி பாடசாலைக்கு தொண்டர்களுடன் நேரடியாக சென்று வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அறநெறிப் பாடசாலை ஸ்ரீ பாலமுருகன் ஆலய ஆசிரியர்கள், மாணவர்கள், நிர்வாகிகள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
21.07.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பேரம் பேசுவதற்கான பலம் யாரிடமுண்டு?

இலங்கை அரசை ஒற்றையாட்சி என்னும் வடிவத்தை தாண்டி வலியுறுத்த வைத்தது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்டம் என்றும், எனவே அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை வலியுறுத்திக் கொண்டிருப்பது அடி முட்டாள்தனம் என்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார்.

அவர் கூறுவது அனைவரும் அறிந்த ஒன்றுதான் அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதரீதியான தலையீடுதான் தென்னிலங்கையை சற்று இறங்கிவரச் செய்தது என்பதும் அதன் காரணமாகத்தான் ஒஸ்லோவில் சமஷ்டி தொடர்பில் பேசும் நிலைமை ஏற்பட்டது என்பதும் உண்மையானது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் இராணுவ பலமே அப்படையான காரணமாகும். ஆனால், விடயம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்விக்கு பின்னர் யார் அந்த இடத்தை நிரப்பக் கூடியவராக இருக்கின்றார்? இன்றுள்ள அரசியல் கட்சிகளால் தென்னிலங்கையை அடிபணியச் செய்யும் நோக்கிலான போராட்டத்தை முன்னெடுக்க முடியுமா? - அதற்கான வல்லமை இருக்கின்றதா? கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் அந்த ஆற்றல் இருக்கின்றதா?

முதலில் புரிந்து கொள்ள வேண்டிய அடிப்படையான உண்மை என்னவென்றால் - போரில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டனர். இப்போது இருக்கும் அரசியல் சூழல் என்பது வெறுமனே போருக்கு பின்னரான அரசியல் சூழல் மட்டுமல்ல மாறாக, விடுதலைப் புலிகளின் தோல்விக்கு பின்னரான அரசியல் சூழல் - இந்த நிலைமையை புரிந்து கொண்டுதான் இன்றைய அரசியல் சூழலை எவ்வாறு எதிர்கொள்ளலாம் என்று சிந்திக்க வேண்டும். அவ்வாறில்லாது வெறும் சுலோகங்களை உச்சரித்துக் கொண்டிருப்பதால் எதுவும் நிகழப் போவதில்லை.

கஜேந்திரகுமார் கூறுவது போன்று குறைவான ஒன்றைக் கேட்டால் அதனை விடவும் கீழிறங்கிச் செல்லவே தென்னிலங்கை முற்படும் என்பதில் பொருளுண்டு. ஆனால், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக ஒன்றுபட்டுச் செயல்படுவதும் இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்த வேண்டும் என்னுமடிப்படையில் ஒன்றுபட்டுச் செயல்படுவதும் இறுதித் தீர்வை அடைவதற்கான தடைகள் அல்லவே!

எனவே, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துங்கள் என்று கோருவதும் தமிழ் மக்களின் அடிப்படையான உரிமைதானே! அதனை கோருவது எந்த வகையில் தவறான ஒன்றாக இருக்க முடியும். அதற்காக சமஷ்டியை கைவிட வேண்டும் என்பது வாதமல்ல. ஏனெனில், இலங்கை தமிழ் அரசுக் கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து சமஷ்டிக் கோரிக்கைத்தானே தமிழரின் கோரிக்கையாக இருக்கின்றது. இதில் புதிதாக விவாதிக்க, சண்டையிட என்ன இருக்கின்றது?

ஒருவேளை தென்னிலங்கையின் அதிகார அரசியலை கேள்விக்குள்ளாக்கக் கூடிய ஆற்றல் தமிழ் கட்சிகளிடம் இருந்தால் இது பற்றி நாம் பேச வேண்டியதில்லை. 2009இற்கு பின்னரான அரசியல் சூழலில், தமிழரின் பேரம் பேசும் பலம் தொடர்ந்தும் சிதைவடைந்து சென்றதே தவிர பலமடையவில்லை. இந்த நிலையில் வாய்ப்பான விடயங்களை கையாள முற்படாமல் வெறும் சுலோகங்களில் சுகம் கண்டு கொண்டிருப்பதை எவ்வாறு புத்திசாலித்தனமான அணுகுமுறை என்று கூற முடியும்?

## பொறுப்பற்ற முறையில் பஸ் செலுத்திய சாரதி

*கொழும்பு, ஜூலை 21*

நாவலப்பிட்டி வரகாவ ரயில் கேட் கடவை மூடப்பட்டிருந்த நிலையில், பொறுப்பற்ற முறையில் தனியார் பேருந்தை செலுத்திய குற்றச்சாட்டில், பேருந்தின் சாரதி நாவலப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

லக்ஸபானவிலிருந்து கினிகத்தேனை வழியாக கண்டி நோக்கி சென்ற தனியார் பேருந்து, வரகாவ ரயில்வே கேட் அருகில் சென்றபோது, கண்டியில் இருந்து நாவலப்பிட்டிக்கு வந்த ரயிலுக்காக பாதுகாப்பு கேட் கடவை மூடப்பட்டிருந்துள்ளது.

ரயில்வே கேட் கடவை திறக்கப்படும் வரை, சில முச்சக்கர வண்டிகள் குறித்த பேருந்தின் முன் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், தனியார் பேருந்தின் சாரதி, ரயில் கேட்டிலுள்ள ஒரு சிறிய இடத்தின் வழியாக பேருந்தைச் செலுத்திச் சென்றுள்ளார். இதேவேளை சில நிமிடங்களில் ரயிலும் குறித்த இடத்தை கடந்துள்ளது.

இச் சம்பவம், அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரி.வி கமெராவில் பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பாக, ரயில்வே பாதுகாப்பு கேட் காவலரால் நாவலப்பிட்டி பொலிஸாருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, பேருந்தின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபருக்கு எதிராக நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாவலப்பிட்டி பொலிஸ் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## வான் விபத்தில் இருவர் காயம்

*கொழும்பு, ஜூலை 21*

ஹற்றன் - தலவாக்கலை வீதியில் சென்.கிளையர் பகுதியிலுள்ள தேவாலயத்துக்கு பயணித்த வானொன்று, பாதுகாப்பு வேலியை உடைத்துக்கொண்டு பிரதான வீதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த தேவாலயத்துக்கு நேற்று முன் தினம் மாலை குழுவொன்றை ஏற்றிச் சென்ற வானொன்றே, சுமார் 15 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான வீதிக்கு மேலே அமைந்துள்ள தேவாலய பகுதியில் வானை திருப்புவதற்கு முற்பட்ட நிலையில் பின்னோக்கிச் சென்று விபத்துக்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் இருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதாகவும், வான் பலத்த சேதமடைந்ததாகவும் தெரிவித்த தலவாக்கலை பொலிஸார்

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கடலில் தத்தளித்த 3 மீனவர்கள் மீட்பு

*கொழும்பு, ஜூலை 21*

வத்தளை - பள்ளியவத்தையை அண்மித்த கடற்பகுதியில் சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட மீன்பிடி படகிலிருந்த 3 மீனவர்கள் கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்ட மூவரும் திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டு நீரியல்வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பள்ளியவத்த கடற்கரைப் பகுதியிலிருந்து நேற்றுமுன் தினம் குறித்த மூன்று கடற்றொழிலாளர்களும் கடலுக்கு சென்றநிலையில், சீரற்ற வானிலை காரணமாக மீண்டும் கரைக்கு திரும்பும் போது, பள்ளியாவத்தை கடற்கரையிலிருந்து மேற்காக சுமார் 4 கிலோ மீற்றர் தொலைவில் அவர்கள் பயணித்த படகின் வெளிப்புற இயந்திரம் செயலிழந்துள்ளது.

இது குறித்து உடனடியாக கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து மேற்கு கடற்படை கட்டளைப் பிரிவின் விரைவு படகொன்று அனுப்பப்பட்டு, பாதிக்கப்பட்ட மீன்பிடி படகில் இருந்த கடற்றொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர். (அ)

## ஹேகித்தையில் ஒருவர் தாக்கிக் கொலை

*கொழும்பு, ஜூலை 21*

வத்தளை - ஹேகித்தை அல்விஸ்வத்தை பகுதியில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் வசித்து வந்த இரண்டு மாடி வீட்டின் மேல் தளத்தில் நேற்று முன் தினம் இரவு இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். முகமூடி அணிந்த நான்கு பேர் முச்சக்கர வண்டியில் பிரவேசித்து குறித்த நபரின் வீட்டிற்குள் நுழைந்து கூரிய ஆயுதங்களால் தாக்கி அவரை கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் கொலை இடம்பெற்ற போது உயிரிழந்தவரின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளும் வீட்டில் இருந்துள்ளனர்.

உயிரிழந்தவர் கொழும்பு 15 பகுதியை சேர்ந்த 43 வயதானவர் என்பதுடன், சில மாதங்களுக்கு முன்பு அந்தப் பகுதியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து தனது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வந்ததாகக் கூறப்படுகிறது.

அத்துடன் 2023 ஆம் ஆண்டு மஹாபாகே பகுதியில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு உதவியவர் என பொலிஸாரால் நடத்தப்பட்ட ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக எந்த சந்தேக நபர்களும் கைது செய்யப்படவில்லை என்பதுடன், வத்தளை பொலிஸாரும், களனி பிரிவு குற்ற விசாரணை பணியகத்தின் அதிகாரிகளும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை -21 திங்ககட்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 05
நல்ல நேரம் :6.00 - 7.30
ராகு காலம் :7.30 -9.00
திதி : துவாதசி




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். புதிதாக ஆடை ஆபரணம் வாங்குவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்ப தால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று வருந்துவீர்கள். விமர்சனங்களை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வாகனத்தில் கவனம் தேவை.யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கடகம்**
உங்களுடைய ஆலோச னைகள் எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**சிம்மம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். காணாமல்போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**கன்னி**
உங்கள் பிடிவாதப்போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**விருட்சிகம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்குப் பிடித்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். புத்தியால் உற்சாகமடைவீர்கள்.

**தனுசு**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

**மகரம்**
குடும்பத்தில் உங்களின் நேரத்தை செலவழிப்பார்கள். உங்களை சுற்றி உள்ளவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அன்புத் தொல்லை குறையும்.

**கும்பம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வாகன வசதிப் பெருகும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

# இந்திய துணைத் தூதரகத்தால் வடமாகாண ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிப் பட்டறை




யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

இந்த பயிற்சிப் பட்டறையில் இந்திய ஊடகவியலாளர்கள் இருவர் சூம் செயலி ஊடாகவும் இருவர் நேரடியாகவும் வளவாளராக கலந்து கொண்டனர்.

பயிற்சிப் பட்டறையை இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி ஆரம்பித்து வைத்தார்.

முடிவில் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (எ)

# யாழில் குளவி கொட்டி நால்வர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணம் மடத்தடிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை குளவி கொட்டியதில் நால்வர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதான வீதியால் சென்ற மக்களை குளவிகள் கலைந்து தாக்கியமையால் 4 பேர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் இருவர், சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ள நிலையில் இருவர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில், பிரதான வீதி மடத்தடி நீர்த்தாங்கிப் பகுதியை அண்மித்த பகுதியில் குளவிக்கூடுகள் காணப்படுவதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (எ)

# நெடுந்தீவில் பிடிபட்ட முதலை கிளிநொச்சிக்கு

கிளிநொச்சி, ஜூலை 21

நெடுந்தீவில்பிடிபட்ட முதலை நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு கொண்டு செல்லப்பட்டது.

நெடுந்தீவு வெட்டுக்களிப் பகுதியை அண்மித்த இடத்தில் உள்ள நீர் முற்றாக வற்றிப் போன பாழடைந்த கிணற்றிலிருந்து குறித்த முதலை மீட்கப்பட்டது.

5 அடி நீளமான முதலை நெடுந்தீவு பிரதேச வன ஜீவராசிகள் திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து, கடற்படை படகுமூலம் குறிகாட்டுவனுக்கு கொண்டு வரப்பட்டு வாகனத்தில் கிளிநொச்சி பிரதேச வன ஜீவராசிகள் திணைக்கள அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. (எ)

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் விரைவில் இரத்து செய்யப்படும்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 21

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய ஓய்வூதியத்தை இரத்து செய்வ தற்குரிய சட்டமூலம் வெகுவி ரைவில் நிறைவேற்றப்படும் என கடற்றொழில் அமைச்சர் இரா மலிங்கம் சந்திரசேகர் தெரிவித் தார்.

நெடுந்தீவுக்கு வெள்ளிக்கிழமை சென்றிருந்த அமைச்சர், பொது அமைப்புகள் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடி, அவர்களின் பிரச்னைகளை கேட்டறிந்துகொண்டார்.

இதன் பின்னர் நெடுந்தீவு பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் விளக்கமளித்தார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்,

ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை ஒரே இரவில் நிறை வேற்றிவிட வேண்டும் என சிலர் நினைக்கின்றனர். அது தவறு.

இதேவேளை, வறுமையின் கோரப்பிடிக்குள் இருந்து மக்களை மீட்பதற்காக சமூக சக்தி வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அரசியல், பொருளாதார மற்றும் சமூக மேம்பாடே எமது இலக்கு. அந்த சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வறுமை நிச்சயம் ஒழிக்கப்படும். இதற்குரிய வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன என மேலும் தெரிவித்தார். (எ)

# தொழில்துறை மன்றத்தால் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் எதிர்வரும் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்தின் பிரதான மண்டபத்தில் (இல 63, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர்) நடைபெறவுள்ளது.

குருதிக் கொடையாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதால் இதில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்களின் பெயர் விவரங்களை (முழுப்பெயர்) 0703663604 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவமான முறையில் தொழில் கல்வி வாய்ப்பு

## உயர்கல்வி பிரதி அமைச்சர்

காலி, ஜூலை 21

பாடசாலைக் கல்வியின் ஊடாகவே தொழில்சார் கல்வியை கௌரவமான முறையில் கற்பதற்கான வாய்ப்பு உருவாக்கப்படும் என்று உயர்கல்வி பிரதி அமைச்சர் நலின் ஹேவாகே தெரிவித்தார்.

புதிய கல்வி மறுசீரமைப்பு குறித்து தென் மாகாண கல்வி அதிகாரிகளுக்கு அறிவூட்டும் நோக்குடன் காலி, தக்ஷினபாய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"புதிய கல்வி மறுசீரமைப்புடன் தொழில்சார் கல்வி நிறுவனங்களை முன்னோக்கிக் கொண்டு செல்லத் தேவையான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்து வருகின்றோம்.

இதன் மூலம், தேர்ச்சியடையாத மாணவர்கள் தொழில்சார் கல்விக்குச் செல்வதற்குப் பதிலாக, அவர்களின் திறமை மற்றும் ஆற்றலின் அடிப்படையில் பாடசாலைக் கல்வியின் ஊடாகவே தொழில்சார் கல்வியை கௌரவமான முறையில் கற்பதற்கான வாய்ப்பு உருவாக்கப்படும்" -என்றார். (எ)

# துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு பாதாள குழு மோதலே காரணம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 21

**பாதாளக்குழுக்களுக்கு இடையிலான மோதல்களே துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு அடிப்படைக்காரணமாக அமைகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.**

உள்நாட்டில் பாதாளக்குழுக்களின் செயல்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக விசேட அதிரப்படையினரின் பங்கேற்புடன் தேடுதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, வெளிநாடுகளில் உள்ள பாதாளக்குழுவினரை கைது செய்வதற்கு இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக நடைபெறுகின்ற துப்பாக்கிப் பிரயோகங்களால் பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பில் காணப்படுகின்ற கரிசனைகள் தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அண்மைய நாட்களில் நடைபெற்று வருகின்ற துப்பாக்கிப் பிரயோகங்களின் பின்னணியில் பாதாளக்கு முக்களுக்கிடையேயான மோதல்களே காரணமாக இருக்கின்றன.

தெஹிவளையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னணியிலும் அவ்விதமான மோதல் நிலைமையே காணப்படுகின்றது. துப்பாக்கிப் பிரயோகத்துக்கு உள்ளாகியவரும் பாதாளக்குழுச் செயல்பாடுகளுடன் தொடர்புடையவர் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகங்கள் உட்பட பாதாளக்குழுக்களின் செயல்பாடுகளை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுததுள்ளோம். தற்போது விசேட அதிரடிப்படையினரின் பங்கேற்புடன் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், சட்டவிரோதமான ஆயுதங்கள் உள்ளிட்டவற்றை மீட்கும் செயல்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனைவிடவும் நாட் டுக்கு வெளியிலிருந்து பாதாளக் குழுக்களை இயக்குகின்றவர்கள் மற்றும் உள்நாட்டு குற்றங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கும் இராஜதந்திர மட்டத்தில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனைத்தொடர்ந்து விசேட குழுக்களை குறித்த நாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது"- என்றார்.

# சுற்றுலா வாகனம் விபத்து நான்கு பேர் உயிரிழப்பு!



கண்டி, ஜூலை 21

கண்டி, உன்னஸ்கிரிய பிரதேசத்தில் சுற்றுலாப் பிரதேசத்துக்குச் சென்ற வாகனம் ஒன்று பாதையை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்ததில் நான்கு பேர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.கும்புக்கொல்ல என்ற இடத்தில் சுமார் 20 அடி பள்ளத்தில் வீழ்ந்து இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில், பெண்கள் மூவரும் ஆண் ஒருவரும் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நடக்கும் போது குறித்த வாகனத்தில் ஆறு பேர் இருந்ததாக உடதும்பறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் மீரிகம பிரதேசத்திலிருந்து சுற்றுலா சென்றதாக தெரிய வருகிறது. மேலும் காயமடைந்தவர்கள் உடதும்பறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஐந்து வயது சிறுவன் ஒருவனும் உள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# குற்றச்செயல்களுடன் தொடர்பு மேலும் 89 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜூலை 21

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 89 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, கடந்த 18 ஆம் திகதி மருதானை, வாழைத் தோட்டம், வெல்லம்பிட்டி மற்றும் வெல்லவாய பொலிஸ் பிரிவுகளில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களின் விவரங்கள் பின்வருமாறு:

மருதானை மற்றும் வாழைத் தோட்டம் பொலிஸ் பிரிவுகளில் 16 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 03 பேரும் 12 கிராம் 57 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 14 பேரும் 03 கிராம் 53 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 07 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவில் 07 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 03 பேரும் 270 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 02 பேரும், 480 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவரும் 50 போதை மாத்திரைகளுடன் ஒருவரும் மற்றும் 28 லீற்றர் சட்டவிரோத மதுபானத்துடன் 08 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லவாய பொலிஸ் பிரிவில் 07 சந்தேக நபர்கள், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவரும் 2 கிராம் 480 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவரும் 198 கிராம் 685 மில்லிகிராம் கஞ்சாவுடன் 14 பேரும் 1500 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானத்துடன் இருவரும் மற்றும் போதைப் பொருள் விற்பனை மூலம் பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 450, 000 ரூபாய் பணத் தொகையுடன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு திறப்பு

நுவரெலியா, ஜூலை 21

மேல் கொத்மலையின் நீரேந்து பகுதிகளில் பெய்து வரும் கனமழையைக் கருத்தில் கொண்டு மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் ஒரு வான்கதவைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்று அதிகாலை முதல் இந்த வான்கதவைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் கொத்மலையின் நீரேந்து பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்தால், நீர்த்தேக்கத்தின் மீதமுள்ள வான்கதவுகள் தானாகவே திறக்கும் என்பதால் நீர்த்தேக்க அணையின் கீழ் பகுதியில் உள்ள கொத்மலை ஓயாவின் இருபுறமும் வசிப்பவர்கள் விழிப்புடன் இருக்குமாறும் அந்தப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் அந்தப் பகுதிகளில் பெய்து வரும் கனமழையால் செயிண்ட் கிளேயார் மற்றும் டெவோன் நீர்வீழ்ச்சிகளின் நீரின் அளவும் அதிகரித்துள்ளது.(எ)

# பொலிஸாரில் 40 சதவீதம் பேர் தொற்றா நோய்களால் பாதிப்பு

## பதில் பொலிஸ்மா அதிபர் தகவல்



இரத்தினபுரி, ஜூலை 21

பொலிஸ் அதிகாரிகளில் 40 சதவீதம் பேர் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு சாத்தியமாகும் என்றும் பதில் பொலிஸ்மா அதிபர் கூறினார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் பொலிஸ் அதிகாரிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார். அவர் மேலும் கூறுகையில்,

"பொலிஸ் அதிகாரிகளைப் பார்த்தால் 20 சதவீதம் முதல் 40 சதவீதம் பேர் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

30 சதவீதம் பேருக்கு இன்னும் பரிசோதனை செய்யப்படவில்லை.

மீதமுள்ள 30 சதவீதம் பேர் ஏதேனும் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். வீட்டுப் பிரச்னைகள், வேலைப் பிரச்னைகள் இவை அனைத்தும் அவர்களைத் தொற்றா நோய்களால் பாதிக்கச் செய்துள்ளன.

பொலிஸ் அதிகாரிகளின் கடமைகள் மேம்படுத்தப்படும். பொலிஸ் அதிகாரிகளால் செய்யப்படும் பணிகள் மிக உயர்ந்த தரத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, அவர்களுக்கு அதிக சலுகைகள் வழங்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

பொலிஸ் அதிகாரிகள் மிகக் குறைந்த சம்பளத்தைப் பெறுகிறார்கள். அந்த சம்பளம் தொடர்பில் ஜனாதிபதியின் அவதானம் வரை கொண்டு செல்லப்பட்டது.

அந்த அவதானத்துக்கு அமைய அடுத்த ஆண்டு புதிய சம்பள அமைப்பைத் தயாரிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்." -என்றார்.

# கார் - பயணிகள் பஸ் மோதி விபத்து 2 கைக்குழந்தைகள் உட்பட மூவர் பலி

குருநாகல், ஜூலை 21

நாரம்மல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாரம்மல - கிரி உல்ல வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற கோர விபத்தில் இரண்டு கைக்குழந்தைகள் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர்.

கரொன்று வீதியை விட்டு விலகி வலது பக்கத்தின் எதிர் திசையில் பயணித்த பஸ் மீது நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களில் மஹாவ, திவுல்லாவ பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய காரின் சாரதியும் 9 மாதங்கள் மற்றும் 11 மாதங்களுடைய இரண்டு பெண் குழந்தைகளும் அடங்குவர்.

விபத்தில் காயமடைந்த பஸ் சாரதி, நடத்துநர் மற்றும் பயணி ஒருவரும் தம்பதெனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து நாரம்மல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, வெல்லவ பொலிஸ் பிரிவின் வாரியப்பொல - கும்புக்கெடே வீதியில் உள்ள கபுஹேன பகுதியில் மற்றொரு விபத்து இடம்பெற்றுள்ளது.

கும்புக்கெடே நோக்கிச் சென்ற லொறி, வீதியில் சென்ற பெண் ஒருவர் மீது மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாய பாடங்களில் ஒன்றை குறைத்து விட்டு

# நேரத்தை 5 நிமிடம் அதிகரிப்பது சில்லறைத்தனமான செயல்பாடு

## முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ சாடல்



கொழும்பு, ஜூலை 21

**கட்டாய பாடங்களில் ஒன்றை குறைத்து விட்டு, நேரத்தை ஐந்து நிமிடத்தால் அதிகரிப்பது எவ்வாறு கல்வி மறுசீரமைப்பாக அமையும். இதனை சில்லறைத்தனமானதொரு செயல்பாடு என்று குறிப்பிட வேண்டும் என்று முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கல்வி மறுசீரமைப்பை சட்ட உருவாக்கத்தின் ஊடாகவே அமுல்படுத்த வேண்டும். அரசாங்கத்துக்கு அவசியம் இருக்குமாயின் நாம் சமர்ப்பித்த உத்தேச உயர்கல்வி ஆணைக்குழு சட்டமூலத்தை சட்டமாக்கலாமெனவும் அவர் கூறினார்.

உத்தேச கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் வினவிய போதே விஜயதாஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டார் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"உத்தேச கல்வி மறுசீரமைப்பை அரசாங்கம் அமுல்படுத்த முனைகிறது. உண்மையில் இது மறுசீரமைப்பா? என்பதில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது. 6 கட்டாய பாடங்களின் எண்ணிக்கையை 5 ஆக குறைத்தல், 45 நிமிட பாடவேளையை 50 நிமிடமாக அதிகரிப்பதை எவ்வாறு கல்வி மறுசீரமைப்பு என்று குறிப்பிடுவது.

புதிய கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்த வேண்டுமாயின் அது சட்டத்தின் ஊடாக இயற்றப்பட வேண்டும். உத்தேச கல்வி மறுசீரமைப்புக்கு அரசாங்கம் ஏதேனும் சட்டமூலங்களை தயாரித்துள்ளதா?, ஏதுமில்லை. அரசாங்கத்தின் புதிய கல்வி மறுசீரமைப்பு சில்லறைத்தனமானது என்றே குறிப்பிட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் உத்தேச புதிய கல்வி மறுசீரமைப்புக்கான பணிகளுக்கு முன்னாள் பிரதம நீதியரசர் சிறீபவன் தலைமையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்த குழு அறிக்கையை சமர்ப்பித்தது.

இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு உயர் கல்வி ஆணைக்குழு சட்டமூலத்தை சமர்ப்பித்து அப்போதைய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் கையளித்தேன்.

உயர் கல்வி ஆணைக்குழு சட்டமூலம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. புதிய சட்டம் ஒன்றை இயற்றிதான் புதிய கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்த வேண்டும் என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தால் புதிய சட்டத்தை இயற்ற முடியாவிடின் நாங்கள் சமர்ப்பித்த உயர்கல்வி ஆணைக்குழு சட்டமூலம் ஜனாதிபதி செயலகத்தில் உள்ளது. அதனை சட்டமாக்கலாம்"- என்றார்.

(எ)

# யாழிலிருந்து திருகோணமலை சென்ற ஓட்டோ மின்கம்பத்தில் மோதி விபத்து

## இருவர் படுகாயத்துடன் மருத்துவமனையில்



மொரவெவ, ஜூலை 21

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கி சென்ற ஓட்டோ விபத்தில் சிக்கியதில் இரண்டு இருவர் படுகாயமடைந்தனர்.

மொரவெவ பொலிஸ் பிரிவில் திருகோணமலை - ஹொரவ் பொத்தானை பிரதான வீதியில் மிரிஸ்வெவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து சனிக்கிழமை இரவு 11. 00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கி சென்ற ஓட்டோவில் தாய் மற்றும் இரண்டு பிள்ளைகள் பயணித்த நிலையில், ஓட்டோ வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் இதன்போது இருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

பலத்த காயமடைந்த இருவரும் மஹதிவுல்வெவ பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

தூக்க கலக்கமே விபத்துக்கான காரணம் எனவும் விபத்து தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சட்டவிரோதமாக இறக்குமதி: ஜீப் வண்டியுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 21

மத்துகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நேபட பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ஜீப் வண்டியுடன் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மத்துகம பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு, போலி ஆவணங்களைப் பயன்படுத்தி பதிவு செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஜீப் வண்டியை சோதனையிட்ட போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# கூரிய ஆயுதங்களால் தாக்கி ஒருவர் கொலை

கொழும்பு, ஜூலை 21

வத்தளை பொலிஸ் பிரிவின் ஹேகித்த - அல்விஸ்வத்த பகுதியில் வீடொன்றில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.உயிரிழந்தவர் வத்தளை, ஹேகித்த பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

ஓட்டோவில் வந்த இனந்தெரியாத நான்கு பேர் குறித்த நபரை கூரிய ஆயுதங்களால் தாக்கி கொலை செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

பொலிஸாரால் நடத்தப்பட்ட விசாரணைகளில், உயிரிழந்தவர் 2023 ஆம் ஆண்டு மஹபாகே பகுதியில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த நபர் என்பது தெரியவந்துள்ளது.

(எ)

# பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துக்கு தந்தையின் பெயர் அவசியமில்லை

## மகளிர் விவகார அமைச்சர் சரோஜா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

குழந்தை பிறந்தவுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பதியும் போது பெற்றோர் திருமணம் முடித்துள்ளனரா? என்பது தற்போது கேட்கப்படுவதில்லை. தந்தையின் பெயர் இல்லாவிடினும் தாயின் குடும்ப வழி பெயர் மற்றும் விவரங்கள் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பதியும் போது பயன்படுத்த முடியும். இதற்கான வசதிகள் காணப்படுகின்றன என்று மகளிர் விவகாரம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

மகளிர் விவகாரம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,"குருநாகல் மாவத்தகம பகுதியில் கடந்த 17 ஆம் திகதியன்று பிறந்து இரண்டு நாட்களான சிசு ஒன்று வயல்வெளியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இது குறித்து சமூகத்துக்கு ஒரு அறிவுறுத்தலை வழங்க வேண்டிய பொறுப்பு மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சுக்கு உண்டு.

பெண்கள் தந்தையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் அல்லது பொறுப்பேற்க முடியாத நிலையில் குழந்தையை பிரசவிக்க நேரிட்டால் பாரதூரமான சுகாதார பாதிப்புக்கும் சமூக நெருக்கடிகளுக்கும் உள்ளாக நேரிடும். ஆகவே இவ்வாறான சம்பவங்கள் குறித்து அமைச்சுக்கு பாரியதொரு பொறுப்பு காணப்படுகிறது.

பொறுப்பேற்க முடியாத நிலை மற்றும் உறுதிப்படுத்த முடியாத சூழல் ஆகிய காரணிகளால் பெண்கள் அச்சமடைந்து இவ்வாறு தாம் பெற்ற குழந்தையை கைவிட்டுச் செல்கிறார்கள். மனிதர்களின் உளவியல் தொடர்புகளை தடுக்க முடியாது. சட்டமியற்ற முடியாது.

இருப்பினும் அந்த உளவியல் ரீதியிலான தொடர்பில் பிரதிபலனாக பிள்ளைகளை பாதுகாப்பற்ற வகையில் விட்டுச் செல்லும் நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

குழந்தை பிறந்தவுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பதியும்போது பெற்றோர் திருமணம் முடித்துள்ளார்களா? என்பது தற்போது கேட்கப்படுவதில்லை. தந்தையின் பெயர் இல்லாவிடினும் தாயின் குடும்பவழி பெயர் மற்றும் விவரங்களை பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பதியும் போது பயன்படுத்த முடியும். அதற்கான வசதிகள் காணப்படுகின்றன. பெண்கள் பிள்ளை பெற்றவுடன் அனைத்தையும் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும்.

பெற்ற குழந்தையை வளர்க்க முடியாவிடின் பிறிதொரு தரப்பினருக்கு அந்த குழந்தையை கையளிக்கும் சட்டத்திலான நிறுவன கட்டமைப்பு நாட்டில் உள்ளது. நீதிமன்ற கட்டமைப்பின் ஊடாக இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதற்கான வசதிகள் மற்றும் ஒத்துழைப்புகள் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சால் வழங்கப்படும்"- என்றார்.

(எ)

# பலத்த காற்று தொடர்பில் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 21

பலத்த காற்று தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, தென், வடமேல் மற்றும் வட மத்திய மாகாணங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10. 00 மணியளவில் வெளியிடப்பட்ட இந்த எச்சரிக்கை இன்று காலை 10. 00 மணி வரை செல்லுபடியாகும் என்று குறித்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் தென் மேற்கு பருவப் பெயர்ச்சியால், சப்ரகமுவ, மத்திய, தென், வடமேல் மற்றும் வட மத்திய மாகாணங்களில் மணிக்கு 50 - 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மணிக்கு 30-40 கிலோ மீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர அரசு இடது பக்கம் சிக்னல் போட்டு வலது பக்கம் சென்று நாட்டை அழிக்கிறது

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



அநுராதபுரம், ஜூலை 21

அரசாங்கம் தேர்தல் மேடையில் இடது பக்கம் சிக்னல் போட்டுவிட்டு வலது பக்கமாக சென்று நாட்டை அழிக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சாடியுள்ளார்.

அரசாங்கம் எத்தகைய கலந்துரையாடல்களையும் நடத்தாது பொருளாதார மத்திய நிலையங்களை தனியார் நிறுவனங்களுக்கு கையளிக்கும் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இதில் கட்டமைப்பு சார் மாற்றமொன்றை மேற்கொள்வதாக இருந்தால், வெளிப்படையாகவும் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும். என்றாலும், எந்த பேச்சுவார்த்தைகளும் இணக்கப்பாடுகளும் எட்டப்படாமல் இதனை முன்னெடுக்க விளைவதன் காரணமாக இந்த முயற்சி தொடர்பில் பல சந்தேகங்கள் எழுகின்றன.

இந்த விவகாரத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்து கேள்வி எழுப்புவேன்.

அரசாங்கம் இந்த விடயத்தில் தன்னிச்சையாக செயல்பட முடியாது. அரசாங்கம் பாராளுமன்றத்தில் எனது பேச்சுச் சுதந்திரத்தை பறித்தாலும் இந்த விடயங்களை முன்வைப்பேன்.

இதுபோன்ற கட்டுப்பாடுகளை விதிப்பது ஜனநாயகத்துக்கு விரோதமான செயலாகும். மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை முன்வைத்து நேர்மறையான தீர்வுகளை தேடுவதற்கு நாடினாலும் அரசாங்கம் எனது பேச்சுரிமையை அனுமதிக்க மறுப்பது ஜனநாயக விரோத செயல் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அநுராதபுரம், தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக சங்க உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விவசாயிகளுக்கான விதைகள், உரங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான இரசாயன பதார்த்தங்கள் போன்ற முக்கிய பொருட்கள், உபகரணங்கள் தொடர்பான விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுக்க ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் முயற்சித்த போதிலும் எமக்கு மக்களின் ஆணை கிடைக்கவில்லை.

விவசாயிகளை கோலோட்ச வந்த இந்த அரசாங்கம் விவசாயிகளை அழித்து வருகிறது. குறைந்தபட்சம் அறுவடைகளுக்கான உத்தரவாத விலைகள் கூட விவசாயிகளுக்கு கிடைத்தபாடில்லை.

இதுபோன்ற சூழ்நிலையில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் முற்றுலுமாக மீறப்பட்டுள்ளன என்றும் சஜித் தெரிவித்தார். (எ)

# துப்பாக்கிச் சூடு இருவருக்கும் விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 21

தலவத்துகொட பகுதியில் இரவு களியாட்ட விடுதிக்கு முன்பாக நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப் பட்ட மதுவரித் திணைக்கள அதிகாரி மற்றும் வர்த்தகர் ஒருவரை விளக்கம றியலில் வைக்குமாறு கடுவெல நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடுவெல நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலவத்துகொட பகுதியில் உள்ள இரவு களியாட்ட விடுதிக்கு அருகே நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் வர்த்தகர் ஒருவருக்கும் மதுவரி திணைக்கள அதிகாரி ஒருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.வாக்குவாதம் நீண்டு சென்று ஏற்பட்ட தகராறில், வர்த்தகர் தனது துப்பாக்கியை மதுவரித் திணைக்கள அதிகாரியை நோக்கிகாட்டியதாக கூறப்படுகிறது.

# "வரலாறு பாடம் கல்வித்திட்டத்தில் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும்"

கொழும்பு, ஜூலை 21

வரலாறு என்ற பாடம் எமது கல்வித் திட்டத்தில் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும் என அஸ்கிரிய பிரிவின் பதிவாளர் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மகாநாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேரர் மேலும் தெரிவிக்கையில்,பொருளாதார ரீதியில் எந்தவித நன்மைகளும் இல்லை என்ற அடிப்படையில்தான் வரலாறு என்ற பாடம் அகற்றப்படவுள்ளது. நிலைமை அப்படி இல்லை.

எமது வரலாற்றுடன் கலாசாரமும் இணைந்துள்ளது. கலாசார பாரம்பரியங்கள், பண்டைய நாகரிகம் போன்றவற்றை அறிந்துகொள்ள அதிகளவு சுற்றுலாத்துறையினர் எமது நாட்டுக்கு வருகின்றனர்.

சுற்றுலாத்துறையால் எமக்கு பெரும் வருமானம் கிடைக்கிறது. வரலாறு மூலம் பொருளாதார நன்மைகள் இல்லை எனக்கூற முடியாது.

அதேபோன்று இலங்கை வரும் சுற்றுலாத்துறையினருக்கு வரலாறு மற்றும் கலாசாரம் பற்றி விடயங்களை தெளிவுபடுத்த வரலாறு பற்றி அறிவுள்ள சமூகம் தேவை.

எனவே வரலாற்றை ஒதுக்கிவிட்டு எமது பொருளாதார செயல்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளது- என்றார். (எ)

# மீன்பிடிக்க சென்றவர் நீரில் மூழ்கி மாயம்

குருநாகல், ஜூலை 21

குருநாகல், நிக்கவெரட்டிய பகுதியில் உள்ள மாகல்ல ஏரி யில் நேற்றுக் காலை படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரண்டு பேரில் ஒருவர் ஏரியில் விழுந்து காணாமல் போயுள்ளார்.

குறித்த நபர் நீரில் மூழ்கியதாக கிடைத்த தகவலை தொடர்ந்து நிக்கவெரட்டிய பொலிஸார் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.நிக்கவெரட்டிய பகுதியைச் சேர்ந்த 48 வயதான நபரே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார். (எ)

# அமைச்சர் விஜித ஹேரத்துடன் நடிகர் ரவி மோகன் சந்திப்பு



கொழும்பு, ஜூலை 21

வெளிவிவகாரம், சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத்துடன் பிரபல இந்திய நடிகரும் தயாரிப்பாளருமான ரவி மோகன் மற்றும் பாடகி கெனிஷா ஆகியோர் நேற்று முன்தினம் சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

அமைச்சர் விஜித ஹேரத் இந்த சந்திப்பு குறித்து எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

இலங்கையில் திரைப்பட சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முக்கியமான கலந்துரையாடல் இடம்பெற்றதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சுற்றுலாத் தலங்களையும் இலங்கையின் வளமான கலாசாரத்தையும் ஊக்குவிக்கும் எதிர்கால திரைப்பட தயாரிப்பு மற்றும் இசை நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள கண்கவர் இடங்களுக்கு மேலும் சுவாரஸ்யமான கதைகள் மற்றும் வெளிநாட்டு தயாரிப்புகளைக் கொண்டுவர எதிர்பார்ப்பதாக அமைச்சர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# ஆசிரியர் பயிலுநர்களுக்கு அழுத்தமற்ற கற்றல் சூழல்

கொழும்பு, ஜூலை 21

தேசிய கல்விப் பீடங்களில் கல்வி கற்கும் ஆசிரியர் பயிலுநர்களுக்கு அழுத்தமற்ற கற்றல் சூழலை உருவாக்குவதற்கும் கல்வி பீடங்களின் தரத்தை மேம்படுத்துவதற்குமான ஒரு செயல் திட்டத்தை செயல்படுத் துவதைப் பற்றித் தனது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள தாக கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவி ரத்ன தெரிவித்தார்.

பத்தரமுல்லை, கல்வி அமைச்சு வளாகத்தில் தேசிய கல்விப் பீடங்களின் பீடாதி பதிகளுடன் நடைபெற்ற கலந் துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

இந்தக் கலந்துரையாடலில் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து கல்விப் பீடங்களின் பீடாதிபதிகளும் கலந்துகொண டனர். ஒவ்வொரு கல்விப் பீடத்துக்கும் தத்தமது கல்வி மற்றும் கல்வி சாரா பிரச்னைகள், உட்கட்டமைப்பு மேம் பாடு தொடர்பான பிரச்னைகள் ஆகியவற்றைப் பற்றி கலந்துரையாட வாய்ப்பு கிடைத்தது.

ஆசிரியர் பயிலுநர்களுக்கு தரமான கல்விச் சூழலை உருவாக்குவதற்காக இதுவரை கவனம் செலுத்தப்படாத பிரச் னைகளுக்குத் நமது விசேட கவனத்தை செலுத்துவதாகவும் முக்கியமான பிரச்னைகள் காணப்படுகின்ற கல்விப் பீடங்களுக்கு தனது கண்கா ணிப்பு பயணத்தை மேற் கொண்டு துரித தீர்வுகளைப் பெற்றுத்தர இருப்பதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

ஆசிரியர் பயிலுநர்களுக்கு சுதந்திரமான கற்றல் சூழலை உருவாக்குவதும் அவர்களின் மனநல நல்வாழ்வுக்காக நடவடிக்கை எடுப்பதும் எதிர்காலத்துக்கான முதலீடாகும். ஏனெனில் எதிர்காலத்தில் அவர்களே பாடசாலை ஆசிரியர்களாக மாணவர்களிடையே செல்லவுள்ளனர்.

அவர்களின் மனநலத்தை மேம்படுத்துவதற்காக ஆலோசனை சேவைகளை வலுப்படுத்த நாம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்து வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# சதுப்பு நிலப் பகுதிகளிலுள்ள கட்டுமானங்கள் அகற்றப்படும்

கொழும்பு, ஜூலை 21

எத்தனை எதிர்ப்புகள் மற்றும் தடைகள் வந்தாலும் சதுப்பு நிலங்களில் உள்ள அனைத்து அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களும் அகற்றப்படும் என்று கமத்தொழில் அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

சதுப்பு நிலங்களில் உள்ள சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


நாட்டில் உள்ள 23 சதுப்பு நிலங்களின் எல்லைகளை தீர்மானிப்பதற்காக, இதை ஒரு தேசிய தேவையாகக் கருதியே அரசாங்கம் ஒரு புதிய திட்டத்தை தொடங்கியதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## சம்பூர் கடற்கரையோர பகுதியில் மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு



திருகோணமலை, ஜூலை 21

திருகோணமலை, சம்பூர் கடற்கரை ஓரமாக கண்ணிவெடி அகழும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மனித எலும்பு எச்சங்கள் வெளிவந்ததை அடுத்து கண்ணிவெடி அகழும் பணி இடை நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மூதூர் - சம்பூர் கடற்கரையோர பகுதியில் நிலக்கீழ் கண்ணிவெடி அகழும் பணி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோர பகுதியில் கடந்த ஒரு வாரகாலமாக எம். ஏ. ஜி. எனப்படுகின்ற கண்ணிவெடி அகழும் நிறுவனம் தங்களுக்குரிய தளபாடம் மற்றும் பொருட்களுடன் முகாமிட்டிருந்ததோடு வியாழக்கிழமை கண்ணிவெடி அகழும் பணியை ஆரம்பித்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இந்த நிலையிலேயே நேற்று ஞாயிற்றுக்கிழமை குறித்த பகுதியில் மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து நீதிமன்ற கட்டளையை பெறுவதற்காக குறித்த பணி நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பூர் படுகொலையின் நினைவாக அமைக்கப்பட்ட தூபியை அண்மித்த பகுதியில் அகழ்வுப் பணி மேற்கொண்ட போதே மனித எலும்பு மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (எ)

## பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு! கல்முனையில் கையெழுத்து வேட்டை



கல்முனை, ஜூலை 21

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து சம உரிமை இயக்கம் அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கையெழுத்து போராட்டம் ஒன்றை நடத்தியது.

இதன்போது, அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை, நீதி வேண்டும் மற்றும் அனைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் போன்ற சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை காட்சிப்படுத்தியிருந்தனர்.

இதன்போது பலரும் தாமாகவே முன்வந்து கையொப்பமிட்டதுடன் கருத்துக்களையும் தெரிவித்தனர்.

(எ-08)

## கிழக்கு மாகாண ஆளுநருடன் இராணுவத் தளபதி சந்திப்பு



திருகோணமலை, ஜூலை 21

இராணுவத் தளபதி லசந்த ரொட்ரிகோ, கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, திருகோணமலை மற்றும் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு விடயங்களில் இராணுவத்தின் ஈடுபாடு மற்றும் பொதுமக்களுடனான அதன் ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடப்பட்டது.

கிழக்கு இராணுவ கட்டளைத் தளபதி ஜனக பல்லேகும்புர மற்றும் 22ஆவது காலாட்படை பிரிவின் கட்டளை அதிகாரி லலித் பெரேரா ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (எ)

## மாணவர்கள் கௌரவிப்பு

திருகோணமலை, ஜூலை 21

திருகோணமலை தோப்பூர் கல்விக் கோட்டத்திலிருந்து இம்முறை ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவித்து நினைவுச் சின்னங்கள் வழங்கும் நிகழ்வு தோப்பூர் -பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தோப்பூர் வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் தோப்பூர் கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவில் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 32 மாணவர்கள் பதக்கங்கள், நினைவுச் சின்னங்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு, கற்பித்த ஆசிரியர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தோப்பூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ. ஜப்பார்

கலந்து சிறப்பித்தார். தோப்பூர் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், தோப்பூர் வர்த்தக சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ)

## போசாக்கு உணவு தயாரிப்பு: மட்டக்களப்பில் செயலமர்வு

மட்டக்களப்பு, ஜூலை 21

மட்டக்களப்பில் போசாக்கு உணவு தயாரிப்பது தொடர்பான செயன்முறையுடன் கூடிய செயலமர்வுநேற்று முன்தினம் நடைபெற்றது.

வாகரை மற்றும் செங்கலடி பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள்இதில் கலந்துகொண்டனர்.

செயலமர்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீட மனைப் பொருளியல் அலகு விரிவுரையாளர் மேனகா சிவாகரன் வளவாளராக கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மனைப் பொருளியல் பிரிவு மாணவர்கள், விழுது நிறுவன உத்தியோகத்தர்கள் எனப் பலரும்கலந்து கொண்டனர். (எ)

## கல்முனை சாஹிரா சம்பியன்



கல்முனை, ஜூலை 21

திருகோணமலை மெத டிஸ்த மகளிர் கல்லூரியில் கடந்த 11, 12, 13 ஆம் திகதி களில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்க சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான இரண்டு பிரிவுகளிலும்கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை அணி சம்பியனானது.

## கட்டடங்களை அகற்றக்கோரி உரிமையாளர்களுக்கு கடிதம்

திருகோணமலை, ஜூலை 21

கிண்ணியா பிரதேச செயலகப் பகுதியில் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தால் கிண்ணியா தோணா கரையோரத்தில் உள்ள வியாபார நிலையங்கள் உள்ளிட்ட கட்டடங்களை அகற்றக் கோரி உரிமையாளர்களுக்கு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் உறுதி காணி உள்ளவர்கள், மீனவர்கள் உள்ளிட்ட பலர் தமது வாழ்வாதாரங்களை இழப்பதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபிடம் முறையிட்டனர்.

எனவே, இது தொடர்பில் கிண்ணியா அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கொண்டு வந்த பிரேரணையின் பிறகு நேற்று முன்தினம் சனிக்கிழமை கரையோர பகுதிக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் உரிய தரப்புடன் பாராளுமன்ற உறுப்பினர் கலந்துரையாடினார்.

இதில், கிண்ணியா நகர சபை தவிசாளர் எம். மஹ்தி, கிண்ணியா நகர சபை செயலாளர் அனீஸ், நகர சபை உறுப்பினர் ரசாத், முன்னாள் நகர சபை உறுப்பினர் கலிபதுல்லாஹ், கிண்ணியா மீனவ சங்க தலைவர் பாயிஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## பொதுஇடத்தில் குப்பை கொட்டுபவர்களை ஆதாரத்துடன் தெரிவித்தால் சன்மானம்

### காரைதீவு பிரதேச தவிசாளர் தெரிவிப்பு

காரைதீவு, ஜூலை 21

குப்பைகளை கண்ட கண்ட இடங்களில் கொட்டுபவர்களுக்கு எதிராக தண்டப்பணம் அறவிடுவதற்கும் குப்பைகளை பொது இடங்களில் கொட்டுபவர்களை சரியான ஆதாரத்துடன் எங்களிடம் தெரிவிப்பவர்களுக்கு சன்மானம் வழங்குவதற்கும் நாங்கள் தீர்மானித்திருக்கின்றோம்.

எனவே பிரதேச மக்கள் எங்களுடன் ஒத்துழைப்பு வழங்கி செயல்பட வேண்டும் என்று அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் எஸ். பாஸ்கரன் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் திண்மக்கழிவகற்றல் பணியை மிகச் சிறப்பாக செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் காரைதீவு - 03 லெனின் வீதி பிரதேசத்தில் சட்டவிரோதமாக கொட்டப்பட்டுள்ள குப்பைகளை அகற்றும் பணியில் காரைதீவு பிரதேச சபை ஊழியர்கள் ஈடுபட்டனர்.

இதன்போது தவிசாளர் மேலும் கூறுகையில்,

எமது பிரதேசத்தில் உள்ள மக்கள் சட்டவிரோதமாக திண்மக்கழிவுகளை வீதிகளில் கொட்டுகின்ற நிலை மாற்றப்பட வேண்டும். இது எதிர்காலத்தில் எமது பிரதேசத்தில் சுகாதார சீர்கேடுகளை, சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும்.

எனவே, சுத்தமான - சுகாதாரமான சூழலையும் அழகான காரைதீவு பிரதேசத்தையும் உருவாக்குவதற்காக எங்களால் முடிந்த முயற்சிகளை செய்து வருகிறோம்.

எங்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இது போன்று எதிர்காலத்திலே வருகின்ற ஒவ்வொரு சனிக்கிழமையும் எமது பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் திண்மக்கழிவகற்றல் விடயத்தை மிகச் சிறப்பாக செய்வதற்கு நாங்கள் முயற்சிகள் செய்து வருகின்றோம்- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானில் பேருந்து கவிழ்ந்து கோர விபத்து, 21 பேர் பலி!



தெஹ்ரான், ஜூலை 21


ஈரானில் பேருந்து கவிழ்ந்து கோர விபத்தில் சிக்கியதில் 21 பேர் பலியாகினர்.

ஈரானின் பர்ஸ் மாகாணம் ஷைரஸ் பகுதியில் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் பேருந்து ஒன்று சென்றுகொண்டிருந்தது. அந்த பேருந்தில் 55 பேர் பயணித்தனர்.

நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த பேருந்து திடீரென வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த 21 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும், 34 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். மேலும், இந்த விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# சுற்றுலா படகு கவிழ்ந்து விபத்து இதுவரை 34 பேர் உயிரிழந்தனர்



ஹனோய், ஜூலை 21

**சுற்றுலா படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இதுவரை 8 குழந்தைகள் உட்பட 34 பேர் உயிரிழந்தனர்.**

தென் சீன கடற்பகுதியில் அமைந்துள்ள நாடு வியட்நாம். இந்த நாட்டில் பல்வேறு சுற்றுலாத் தலங்கள் உள்ளன. குறிப்பாக, ஹா லாங் வளைகுடா பகுதியில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களை காண தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். சுற்றுலாப் பயணிகள் படகுகள் மூலம் அந்தப் பகுதிக்குச் சென்று இயற்கை அழகை கண்டு களித்து வருகின்றனர்.

இந்த நிலையில், தலைநகர் ஹனோயிலிருந்து 53 சுற்றுலாப் பயணிகள் நேற்று முன்தினம் மதியம் படகு மூலம் ஹா லாங் வளைகுடா பகுதிக்கு சுற்றுலா சென்றனர். தென் சீன கடற்பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக சூறைக்காற்றுடன், கனமழை பெய்தது. இதனால், படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. படகில் பயணித்த அனைவரும் கடலில் விழுந்து தத்தளித்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் கடலில் தத்தளித்த 12 பேரை உயிருடன் மீட்டனர். ஆனால், இந்த சம்பவத்தில் 18 பேர் உயிரிழந்தனர். எஞ்சிய 23 பேர் கடலில் மாயமான நிலையில் அவர்களைத் தேடும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. கடலில் மாயமான எஞ்சியோரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், சுற்றுலா படகு கடலில் கவிழ்ந்த விபத்தில் நேற்று பலி எண்ணிக்கை மேலும் அதிகரித்தது. இதன்படி விபத்தில் 8 குழந்தைகள் உட்பட 34 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# இனியாவது அமைதி பேச்சு முடுக்கிவிடப்பட வேண்டும்

## உக்ரைனுடன் உடன்படும் புடின்

மொஸ்கோ, ஜூலை 21

ரஷ்யா - உக்ரைன் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தைகள் இனியாவது முடுக்கிவிடப்பட வேண்டும் என்ற உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் கருத்தில் உடன்படுவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.

நேட்டோவில் உக்ரைன் இணைய எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆம் திகதி அந்த நாட்டுக்கு எதிராக ரஷ்யா, இராணுவ நடவடிக்கையை தொடங்கியது. ஏறக்குறைய மூன்றரை ஆண்டுகளாக போர் நடைபெற்று வரும் நிலையில், இதுவரை நடைபெற்ற சமாதான முயற்சிகள் பலனளிக்கவில்லை. எனினும், அமைதிக்கான தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், போரில் ஈடுபட்டு வரும் நாடுகள் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட அதிக முனைப்பு காட்ட வேண்டும் என்று உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார். முழுமையான மற்றும் நிபந்தனையற்ற போர் நிறுத்தத்துக்கு ரஷ்யா முன்வர வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அமைதிப் பேச்சுவார்த்தைகள் முடுக்கிவிடப்பட வேண்டும் என்ற ஜெலன்ஸ்கியின் கருத்தில் உடன்படுவதாக புடின் தெரிவித்தார். (எ)

# உக்ரைனில் குற்றங்கள் அதிகரிப்பு

கீவ், ஜூலை 21

உக்ரைனில் மூன்றரை ஆண்டுகளாக நீடித்து வரும் போர் காரணமாக உள்நாட்டில் போதைப் பொருள் கடத்தல், ஆயுதங்கள் கடத்தல், மனிதர்களை கடத்துதல், பொருளாதார குற்றங்கள் உள்ளிட்ட குற்றச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக ஐ. நா தெரிவித்துள்ளது.

ரஷ்யா தொடுத்த போர் தொடங்கி மூன்றரை ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், உக்ரைனில் நிகழும் குற்றங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பில் ஐ.நா போதைப்பொருள் மற்றும் குற்றப்பதிவு அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் உக்ரைன் மக்களுக்கு போர் சொல்லொணாத் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு, திட்டமிட்ட முறையில் நடக்கும் குற்றங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. போருக்குப் பிந்தைய மறுகட்டமைப்புக்கான பயணத்தில் இது ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பணய கைதிகளை விடுவிக்க கோரி இஸ்ரேலில் மக்கள் போராட்டம்



டெல் அவிவ், ஜூலை 21

பணய கைதிகளை விடுவிக்கக் கோரி இஸ்ரேலில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

50 பணயக் கைதிகளை உயிருடனோ அல்லது அவர்களின் உடல்களையோ திரும்பக் கொண்டு வரவேண்டும் என்றும் போரை முடிவுக்கு கொண்டு வர ஒரு விரிவான ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி தரவேண்டும் என்றும் கோரி பெருமளவான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கைகளில் இஸ்ரேல் கொடியை ஏந்தியபடியும் பதாகைகளுடனும் ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தி கோஷம் எழுப்பியபடி போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# சிரியாவில் போர் நிறுத்தம்

டமாஸ்கஸ், ஜூலை 21

இஸ்ரேலும் சிரியாவும் பிராந்திய சக்திகளின் ஆதரவுடன் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டுள்ளதாக துருக்கிக்கான அமெரிக்கத் தூதுவர் ரொம் பராக் தெரிவித்தார்.

ட்ரூஸ் மக்களைப் பாதுகாக்க சிரியப் படைகளை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலைத் தொடர்ந்து அவர் இதனைத் தெரிவித்தார்.(எ)

# இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியை பயன்படுத்த தடை

இஸ்லாமாபாத், ஜூலை 21

இந்திய விமானங்கள் பாகிஸ்தான்வான்வெளியை பயன்ப டுத்த தடை நீடிக்கப் பட்டுள்ளது.

காஷ்மீரில் உள்ள பஹல்காம் சுற்றுலாத் தளத்தில் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து மே 7ஆம் திகதி பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது “ஒப்ரேஷன் சிந்தூர்“ என்ற பெயரில் இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தியது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 03: 50 மணிக்கு அமுலுக்கு வந்த விமானத் துறையினர்களுக்கான அறிவிப்பின்படி, இந்திய விமான நிறுவனங்களால் இயக்கப்படும் எந்த விமானமோ அல்லது இந்தியாவுக்குச் சொந்தமான அல்லது குத்தகைக்கு விடப்பட்ட இராணுவம் மற்றும் சிவில் விமானங்களோ பாகிஸ்தான் வான்வெளியைப் பயன்படுத்த அனுமதிக்கப்ப டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தத் தடை ஓகஸ்ட் 24 ஆம் திகதி அதிகாலை 05: 19 மணி வரை அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 30 ஏவுகணைகள், 300 ட்ரோன்களை ஏவி உக்ரைன் மீது ரஷ்யா கடும் தாக்குதல்

கீவ், ஜூலை 21

உக்ரைன் மீது 30 ஏவுகணைகள், 300 ட்ரோன்களை ஏவி ரஷ்யா கடும் தாக்குதல் நடத்தியுள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் ஆயிரத்து 243ஆவது நாளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால், அது தோல்வியில் முடிந்தது.

இதேபோன்று, போர் நிறுத்தம் தொடர்பில் ரஷ்யா - உக்ரைன் நடத்திய நேரடி பேச்சுக்கள் தோல்வியடைந்தன. இதனால், போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா நேற்று முன்தினம் அதிரடித் தாக்குதல் நடத்தியது. உக்ரைனின் சுமி மாகாணம் மீது 30 ஏவுகணைகள், 300 ட்ரோன்களை ஏவி அதிகாலை ரஷ்யா தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

இதேவேளை, பெரும்பாலான ஏவுகணைகள், ட்ரோன்கள் உக்ரைன் வான்பாதுகாப்பு அமைப்பால் சுட்டு வீழ்த்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவை வீழ்த்தியது இங்கிலாந்து

லண்டன், ஜூலை 21

இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியை இங்கிலாந்து அணி வீழ்த்தியது.


ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய மகளிர் கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற் கொண்டு விளையாடி வருகிறது. இங்கிலாந்துக்கு எதி ரான ரி - 20 தொடரை முதல்முறையாக வென்ற இந்திய அணி அடுத்து 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றுள்ளது.

இதில் சவுத்தம்டனில் நடைபெற்ற முதலாவது ஆட் டத்தில் இந்திய அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையி லான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி லண்டன் லோர்ட்ஸ்மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆனால் அங்கு மழை பெய்ததன் காரணமாக இந்த போட்டி ஏறக்குறைய இரண்டரை மணி நேரம் தாமதமாக தொடங்கியது. இதனால், ஆட்டம் தலா 29 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடத்தப்பட்டது.

முதலில் துடுப்பாட்டம் செய்த இந்தியா 29 ஓவர் களில் 8 விக்கெட்களை இழந்து 143 ஓட்டங்கள் எடுத் தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக மந்தனா 42 ஓட்டங்கள் சேர்த்தார். இங்கிலாந்து தரப்பில் எக்லெஸ் டோன் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதையடுத்து இலக்கை நோக்கி விளையாடிய



இங்கிலாந்து அணி 21 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 116 ஓட்டங்கள் எடுத்த போது மழை மீண்டும் பெய்தது. இதன் காரணமாக ஆட்டம் தடைப்பட்டது. இதையடுத்து டி. எல். எஸ். முறைப்படி இங்கிலாந்து அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 1-1 என சமனில் உள்ளது. (எ)


# ஆஸி அணி அறிவிப்பு

கிங்ஸ்டன், ஜூலை 21

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இதில் அவுஸ்திரேலியா - மேற்கு இந்திய தீவு அணிகள் இடையிலான முதலாவது ரி - 20 போட்டி கிங்ஸ்டனில் உள்ள சபீனா பார்க் மைதானத்தில் இன்று அதிகாலை நடைபெறுகிறது. இதில், அவுஸ்திரேலிய அணி சார்பில் மிட்செல் மார்ஷ் (தலைவர்), ஜேக் பிரேசர் மெக்கர், ஜோஷ் இங்கிலிஸ் (விக்கெட் காப்பாளர்), கேமரூன் க்ரீன், கிளென் மெக்ஸ்வெல், மிட்செல் ஓவன், கூப்பர் கனோலி, பென் துவார்ஷியஸ், சீன் அப் போட், நாதன் எல்லிஸ், அடம் ஸம்பா ஆகியோர் விளை யாடவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 8 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி



ஹராரே, ஜூலை 21

சிம்பாவேக்கு எதிரான போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.

சிம்பாவேயில் முத்தரப்பு ரி - 20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் 3ஆவது லீக் ஆட்டத்தில் நேற்று முன்தினம் ஹராரேவில் நியூசிலாந்து - சிம்பாவே அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பாட்டம் செய்த சிம்பாவே 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப் புக்கு 120 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக வெஸ்லி மாதவரே 32 பந்துகளில் 36 ஓட்டங்கள் சேர்த்தார். பிரையன் பென்னட் 21, டோனி முன்யோங்கா 13, சிக்கந் தர் ராஸா 12, ரியான் பரூல் 12 ஓட்டங்கள் சேர்த்தனர். நியூசிலாந்து அணி சார்பில் மேட் ஹென்றி 3 விக்கெட் களை வீழ்த்தினார்.

121 ஓட்டங்கள் இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய நியூசிலாந்து அணி 13. 5 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 122 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்கள் வித் தியாசத்தில் வெற்றி பெற்றது. தனது 11ஆவது அரைச் சதத்தை விளாசிய டெவான் கொன்வே 40 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 59 ஓட்டங்களும் டேரில் மிட்செல் 19 பந்துகளில் ஒரு சிக்ஸர், ஒரு பௌண்ட்ரியுடன் 26 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமி ழக்காமல் இருந்தனர். முன்னதாக ரச்சின் ரவீந்திரா 19 பந்துகளில், ஒரு சிக்ஸர், 4 பௌண்ட்ரிகளுடன் 30 ஓட்டங்களும் ரிம் ஷெய்பர்ட் 3 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழந்தனர். (எ)

# ஆஸி அணி - மே. இ. தீவுகள் முதல் ரி - 20 போட்டி இன்று

கிங்ஸ்டன், ஜூலை 21

அவுஸ்திரேலியா - மேற்கு இந்திய தீவுகள் மோதும் முதல் ரி - 20 போட்டி இன்று நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. முதலில் நடைபெற்ற 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் மேற்கு இந்திய தீவுகள் அணியை எளிதில் வீழ்த்தி அவுஸ்திரேலியா தொடரை 3 - 0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து இவ்விரு அணிகள் இடையே 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர் நடைபெறுகிறது.

இதில் அவுஸ்திரேலியா - மேற்கு இந்திய தீவு அணி கள் இடையிலான முதலாவது ரி - 20 போட்டி கிங்ஸ்ட னில் உள்ள சபீனா பார்க் மைதானத்தில் இலங்கை நேரப் படி இன்று திங்கட்கிழமை அதிகாலை நடைபெறு கிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துக்கு பிறகு அவுஸ் திரேலிய அணி விளையாடும் முதல் ரி - 20 போட்டி இதுவாகும். (எ)

# சுவிஸ் ஓபின் ரென்னிஸ் அலெக்சாண்டர் வெற்றி



ஜிஸ்டாட், ஜூலை 21

சுவிஸ் ஓபின் ரென்னிஸ் தொடரின் இறுதிப்போட் டிக்கு அலெக்சாண்டர் பப்ளிக் முன்னேறினார்.

பல முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள சுவிஸ் ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி சுவிட்சர்லாந்தில் உள்ள ஜிஸ்டாட் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான கஜகஸ்தானின் அலெக்சாண்டர் பப்ளிக், பிரான்ஸின் ஆர்தர் காசாக்ஸ் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்ட அலெக்சாண்டர் பப்ளிக் 6-1, 7-5 என்ற செற் கணக்கில் ஆர்தர் காசாக்ஸை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். (எ)

மகளிர் ஐரோப்பிய உதைபந்தாட்டம்

# சுவிட்சர்லாந்து அணியை வீழ்த்தி ஸ்பெயின் அணி அரையிறுதியில்



பேர்ன், ஜூலை 21

மகளிர் ஐரோப்பிய உதைபந்தாட்ட போட்டியில் சுவிட்சர்லாந்து அணியை வீழ்த்தி ஸ்பெயின் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

14ஆவது மகளிர் ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டி சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வருகிறது. 16 அணிகள் பங்கேற்றுள்ள இந்தப் போட்டி இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டது. இதில் பேர்ன் நகரில் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் உலக சம்பியன் ஸ்பெயின் அணி, போட்டியை நடத்தும் சுவிட்சர்லாந்துடன் மோதியது .

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் 9ஆவது நிமிடத் தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை ஸ்பெயின் வீராங் கனை மரியானா வீணடித்தார். முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

66ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் அணி முதல் கோல் அடித்தது. மாற்று வீராங்கனையாக களம் கண்ட அதி னியா டெல் காஸ்டிலோ கோலடித்தார். 71ஆவது நிமி டத்தில் ஸ்பெயின் வீராங்கனை கிளாடியா பினா கோல டித்து அணியின் முன்னிலையை 2-0 என்ற கணக்கில் அதிகரித்தார்.

கடைசி வரை போராடியும் சுவிட்சர்லாந்து அணியால் கோல் எதுவும் திருப்ப முடியவில்லை. முடிவில் ஸ்பெயின் அணி 2 - 0 என்ற கோல் கணக்கில் சுவிட்சர்லாந்தை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. (எ)

# ரிஷப் பண்டுக்கு பதிலாக களமிறங்கும் துருவ் ஜூரெல்





மான்செஸ்டர், ஜூலை 21

இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியில் ரிஷப் பண்டுக்கு பதிலாக துருவ் ஜூரெல் களமிறங்கவுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பய ணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் லண்டன் லோர்ட்ஸில் நடைபெற்ற 3ஆவது டெஸ்டில் ரிஷப் பண்ட் பாய்ந்து விழுந்து பந்தை பிடிக்க முயற்சித்தபோது, இடதுகை ஆள்காட்டி விரலில் காயம் ஏற்பட்டது.

இதன் பிறகு அந்த ஆட்டம் முழுவதும் அவர் விக் கெட் காப்பாளராக வரவில்லை. இதனால் துருவ் ஜூ ரெல் விக்கெட் காப்பாளர் பணியை கவனித்தார். ஆனால், ரிஷப் பண்ட் துடுப்பாட்டம் மட்டும் செய்தார். இந்த நிலையில், மான்செஸ்டரில் நாளை மறுதினம் 23ஆம் திகதி தொடங்கும் 4ஆவது டெஸ்டிலும் அவர் விக்கெட் காப்பாளராக களமிறங்குவது சந்தேகம்தான். இதனால் அவர் ஒரு துடுப்பாட்ட வீரராக மட்டும் ஆடுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இருப்பினும் பல முன்னாள் வீரர்கள் ரிஷப் பண்டை முழுநேர துடுப்பாட்ட வீரராக விளையாட வைக்க கூடாது என்று கூறிவருகின்றனர். இதனிடையே இந்திய துணை பயிற்சியாளரான ரையான் டென் டஸ்சாட், ரிஷப் பண்ட் இன்னும் முழுமையாக குணமடைய வில்லை என்னும் ஆட்டத்தின் நடுவில் விக்கெட் காப்பாளரை மாற்றும் சூழ்நிலையை விரும்பவில்லை என்றும் தெரிவித்தார். இதனால் ரிஷப் பண்ட் விஷ யத்தில் குழப்பம் நிலவி வருகிறது.

இதனிடையே 4ஆவது போட்டியில் ரிஷப் பண் டுக்கு பதிலாக துருவ் ஜூரெல் களமிறங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மான்செஸ்டரில் இன்னும் ரிஷப் பண்ட் பயிற்சியை தொடங்கவில்லை. மறுபுறம் துருவ் ஜூரெல், களத்தடுப்பு பயிற்சியாளருடன் இணைந்து தீவிரமாக பயிற்சி மேற்கொண்டு வரும் வீடியோ இணையத்தில் வைரலானது. இதன் காரண மாக ரிஷப் பண்டுக்கு 4ஆவது போட்டியில் ஓய்வளிக் கப்படலாம் எனக் கூறப்படுகிறது. இதன் காரணமாக துருவ் ஜூரெல் விளையாடும் அணியில் இடம்பெற வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை...

பெண்களின் என்பு கூட்டுத் தொகுதிகளும் மீட்கப்பட்டன.

இதற்கிடையில், இந்த அகழ்வுப் பணி தொடர்பில் இறுதியாக நடை பெற்ற நீதிமன்ற வழக்கு விசாரணையின் போது, செம்மணி- சித்துப்பாத்தியில் குற்றச் செயல் இடம்பெற்றுள்ளதாக தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ் சோம தேவா நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## செம்மணி...

குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- "வடக்கு யுத்தம் நடந்த மண்.

இந்த மண்ணில் எங்கு தோண்டினாலும் மனிதப் புதைகுழிகள் இருக்கத்தான் செய்யும்.

யுத்தத்தில் உயிரிழந்தவர்கள் பலர் மண்ணுக்குள்தான் புதைக்கப்பட்டார்கள்.

எனவே, அந்தப் புதைகுழிகள் யுத்தத்தின் பின்னர் வெளிக்கிளம்பும் போது பலரும் வெவ்வேறு விதமாகக் கருத்து வெளியிட்டு வருகின்றனர். செம்மணியில் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியை பெருமளவு நிதிகளை வீண்விரயம் செய்து அரசு அகழ்கின்றது. இது தேவையற்றது.

அந்தப் புதைகுழிக்குள் இருந்து எலும்புக்கூடுகளாக மீட்கப்படுபவர்கள் உண்மையில் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியாது.

ஏனெனில் யுத்தத்தில் மூன்று இனத்தவர்களும் உயிரிழந்தனர்.

எனவே, செம்மணி மனிதப் புதை குழியைத் தோண்டுவது மீண்டும் இன வன்முறைக்கே வழிவகுக்கும் - என்றார். (அ)

## அதிக...

விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு இதனை தெரிவித்த அவர், இதுவே, தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை எனவும் நாமே பயரிட்டு, நாமே உண்போம் என்ற கொள்கை தங்களிடம் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

இத்தகைய கொள்கையை நாம் கொண்டிருப்போமாயின், நாம் அரிசியை இறக்குமதி செய்வதில்லை என்பதை அறிந்துகொள்ளும் மோசடி விற்பனையாளர்கள் தங்களுக்கு ஏற்றவகையில் விலையை அதிகரிப்பர் என அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், அமைச்சரின் இந்த கருத்துக்கு விவசாய அமைப்புகள் கண்டனம் வெளியிட்டு வருகின்றன.

முன்னதாக அரிசி இறக்குமதிக்கு எதிரான கொள்கையை கொண்டிருந்த அரசாங்கம், தற்போது அதிலிருந்து விடுபட்டு பாரியளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு சலுகை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளதாக அந்த அமைப்புகள் குற்றம்சுமத்துகின்றன.

விலையை கட்டுப்படுத்துவதற்கு அரிசி உள்ளிட்டவை இறக்குமதி செய்யப்படுமாயின், உள்நாட்டு உற்பத்திகளை குப்பைகளில் தூக்கி எறிய வேண்டி ஏற்படும். சந்தையில் அரிசி விலை அதிகரிப்பை கட்டுப்படுத்துவதற்கு, அரிசியை இறக்கு மதி செய்வது ஒருபோதும் தீர்வாக அமையாது.

அதிக விலைக்கு அரிசி விற்பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதால் மாத்திரம் நிலைமை கட்டுப்படுத்த முடியும்.

தற்போது, "அரிசி இறக்குமதி செய்வதாக அரசாங்கம் அச்சுறுத்துகிறது அதனால் நாம் நெல்லை குறைந்த விலையில் கொள்வனவு செய்கிறோம்" என பாரியளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள், விவசாயிகளிடம் கூறுகின்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, இவ்வாறான தீர்மானங்களால் அரசாங்கம் மேலும் பலவீனமடைந்து, அதன் ஆயுட்காலமும் குறைவடைந்து வருவதாக விவசாய அமைப்புகள் தெரிவிக்கின்றன. (அ)

## ராஜபக்ஷ....

இல்லை. எனவே, தமிழக முதல்வர் உட்பட தமிழக தலைவர்கள் கச்சதீவு விவகாரத்தை அரசியலுக்காக பயன் படுத்துகின்றனர்.

சர்வதேச சட்டத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுவிட்டது. அது இலங்கைக்கு உரித்தானது - என்றார். (அ)

## பிள்ளையான்...

பாராளுமன்ற உரையில் குறிப்பிட்டிருந்தேன்.

அதற்கமைய, நீதிமன்றத்துக்கு கண்டறியப்பட்ட விடயங்களை முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றில் அவற்றை முன்வைத்ததன் பின்னர், நீதிமன்றம் மற்றும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய, மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

பிள்ளையானிடம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் அதேநேரம், ஏற்கனவே விசாரணைகளில் வெளிவந்த அல்லது கண்டறியப்பட்ட விடயங்களை நீதிமன்றுக்கு முன்வைக்க வேண்டியுள்ளது.

இந்தநிலையில், தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெறும் நிலையில், விசாரணைகளில் கண்டறியப்பட்ட சில விடயங்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்த முடியாது" என தெரிவித்துள்ளார். (அ)

## உள்ளூராட்சி...

மன்னாரில் ஒரு சபையிலும், வவுனியாவில் உள்ள ஐந்து சபைகளில் மூன்று சபைகளிலும் பெண்கள் இல்லை. முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு தலா இரண்டு சபைகளில் பெண்கள் இல்லை.

அம்பாறையில் ஏழு சபைகளிலும், திருகோணமலையில் நான்கு சபைகளிலும் பெண் உறுப்பினர்கள் யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில், புத்தளத்தில் ஒரு சபையிலும், அனுராதபுரத்தில் மூன்று சபைகளிலும், பொலனறுவையில் இரண்டு சபைகளிலும் பெண்கள் இல்லை.

ஊவா மாகாணத்தில், பதுளையில் மூன்று சபைகளிலும், மொனராகலையில் இரண்டு சபைகளிலும் பெண்கள் இல்லை, அதே நேரத்தில் சபரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் நான்கு சபைகளிலும் பெண்கள் இல்லை.

*2018 ஆம் ஆண்டில், 8,719 வேட்பாளர்களில் 1,926 பேர் பெண்கள், இது வரலாற்று முன்னேற்றம்"* என்று ஜன நாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மஞ்சுளா கஜநாயக்க தெரிவித்தார்.

இருப்பினும், எண்ணிக்கைகளை வெறும் காகிதத்தில் வைப்பதில் மட்டும் நாங்கள் திருப்தி அடைய முடியாது- என்றார் அவர்.

அரசியலில் பெண்களைச் சுற்றி ஒரு சமூக களங்கம் உள்ளது. இது ஒரு அரசு சாரா நிறுவனத்தால் இயக்கப்படும், மேற்கத்திய சார்பு கருத்தாகக் கருதப்படுகிறது என்று அவர் கூறினார். இதைப் புரிந்துகொள்ளும் விதத்தில் நமக்கு மாற்றம் தேவை, மேலும் அரசியல் பீரோக்கள், நியமன வாரியங்கள் மற்றும் பிற முக்கியமான கட்சி கட்டமைப்புகளில் பெண்களின் இருப்பை அதிகரிப்பதே எனது வலுவான பரிந்துரை. பெண் வேட்பாளர்களுக்கு நிதி ஆதரவு இல்லாததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மற்ற நாடுகளில், பெண் அரசியல் பங்கேற்பை அதரிக்க குறிப்பிட்ட நிதிகள் உள்ளன. இங்கு, பிரசார நிதியுதவியைப் பொறுத்தவரை அரசியல் கட்சிகள் தீவிரமாக பாகுபாடு காட்டு கின்றன என்று அவர் கூறினார்.

பெண்கள் விவகாரங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு பெண்களுக்கு அதிகாரம் அளிக்கத் தவறியதற்காக கஜநாயக்க விமர்சித்தார், அர்ப்பணிப்புள்ள பயிற்சி அலகுகள் கூட செயலற்ற நிலையில் இருப்பதாக அவர் கூறினார். (அ)

# கடந்த ஆண்டு பரிந்துரைகளில் 30 சதவீதம் மட்டுமே நடைமுறை

## மனித உரிமைகள் ஆணைக்குழு அதிருப்தி

கொழும்பு, ஜூலை 21

கடந்த ஆண்டு தனது பரிந்துரைகளில் சுமார் முப்பது சதவீதம் மட்டுமே செயல்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், தனது அறிவுறுத்தல்களை எதிர்த்து மேன்முறையீடு செய்ய முடியாது என்றும், இதன் காரணமாக, குறித்த பரிந்துரைகளை அரச நிறுவனங்கள், செயற்படுத்தக் கடமைப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர்கள், மாகாண தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நிறுவனங்கள் மற்றும் சட்டப்பூர்வ சபைகளுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நடைமுறை என்ற போர்வையில் தமது பரிந்துரைகளைச் செயல்படுத்தாமல் இருப்பது நாட்டின் சட்டத்திற்கு எதிரானது என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனை மையப்படுத்தி, தமது பரிந்துரைகளைச் செயற்படுத்தாத, அரச நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கிளிநொச்சியில் உள்ள இரணைதீவை அணுகுவதற்குத் தடை விதிக்கப்பட்ட ஒரு குடிமகன் தாக்கல் செய்த மனுவை விசாரித்த பின்னர், 2023 டிசெம்பர் 8 ஆம் திகதியன்று, குறித்த தீவுக்குள் பொதுமக்கள் நுழைவதற்குக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறு ஆணைக்குழு அறிவுறுத்தியது.

இது தொடர்பில், அந்தப்பகுதியில் பணிகளில் ஈடுபட்டுள்ள கடற்படையினருக்கு எழுத்துப்பூர்வ அறிவுறுத்தல்களை வழங்கவும் ஆணைக்குழு உத்தரவிட்டது.

இருப்பினும், "தேசியப் பாதுகாப்பு" என்று கூறி, கடற்படை அந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்தத் தவறிவிட்டது.

இந்தநிலையில் குறித்த செயற்பாடு, திருப்திகரமாக இல்லை என்று உணர்ந்த பின்னர், ஆணைக்குழு புதிய சுற்றறிக்கையை வெளியிட்டதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் கெஹான் குணதிலக்க தெரிவித்துள்ளார். (அ)

# விபத்தில் மூவர் உயிரிழப்பு


கொழும்பு, ஜூலை 21

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் வாகனம் ஒன்று வீதியின் வலது பக்கத்திற்கு இழுத்துச் சென்று எதிர் திசையில் பயணித்த பேருந்து மீது மோதிய விபத்தில் சாரதியும் இரண்டு குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர்.

நாரம்மல பொலிஸ் பிரிவில் உள்ள நாரம்மல-கிரியுல்ல வீதியில் நேற்று முன் தினம் மாலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

9 மற்றும் 11 மாதங்களேயான இரண்டு குழந்தைகளும் 38 வயதான சாரதியுமே இவ்வாறு உயிரிழந்ததுடன், இவர்கள் திவுல்லெவ, மஹாவ பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். நாரம்மல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## வட்டுக்கோட்டையில்...



குறித்த வன்முறைச் சம்பவத்தில் ஒரு மோட்டார் சைக்கிள் தீக்கிரை ஆக்கப்பட்டுள்ளதுடன் , மேலுமொரு மோட்டார் சைக்கிள் அடித்து நொறுக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது

மூளாய் பகுதியில் இரு தனி நபர்களுக்கு இடையில் நேற்று முன் தினம் சனிக்கிழமை ஏற்பட்ட தர்க்கம் , வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம் வரையில் சென்று, தீர்த்து வைக்கப்பட்டது.

அந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரு நபர்களின் பிரச்சனை மீண்டும் தலைதூக்கிய நிலையில், அது அப்பகுதியை சேர்ந்தவர்களின் பிரச்னையாக உரு மாறி இரு தரப்பினரும் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

அதன் போது மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டதுடன், மற்றுமொரு மோட்டார் சைக்கிள் அடித்து நொருக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் அறிந்து வட்டுக்கோட்டை பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்த வேளை பொலிஸார் மீது கல் வீச்சு தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது.

அதனை அடுத்து பொலிஸார் வானத்தை நோக்கு துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு அப்பகுதியில் குழுமி இருந்தவர்களை துரத்தினர்.

அத்துடன் வன்முறைச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். ஏனையவர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குறித்த சம்பத்தில் இடம்பெற்ற குழு மோதலைத் தொடர்ந்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# உள்ளூராட்சி கதிரைகள் நிரப்பி முடிந்தது கொள்கை ரீதியான கூட்டுக்கு வாருங்கள்

## தமிழ் அரசு கட்சிக்கு கஜேந்திரகுமார் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

**உள்ளூராட்சி மன்ற கதிரைகளை நிரப்பி முடித்த நிலையில் இனியாவது அரசியல் கூட்டை தவிர்த்து மக்களுக்கான கொள்கை ரீதியான கூட்டுக்கு இலங்கைத் தமிழ் அரசு கட்சி வரவேண்டுமென அகில தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற சமகால விடயம் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஒரே நிலைப்பாட்டில் உள்ள தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என விரும்பினோம். அதற்காக பல விட்டுக்கொடுப்புகளையும் மேற்கொண்டோம்.

ஆனால் துரதிஷ்டம், தமிழ் அரசு கட்சி அதனை ஏற்க அதன் நிலையில் அறுதிப் பெரும்பான்மையுடன் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியை எந்தவொரு கட்சியும் உறுதிப்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டது. நாங்கள் உள்ளூராட்சி மன்றங்களில் கதிரைகளுக்காக யாருடனும் சண்டை பிடித்தது கிடையாது.

தமிழ் அரசு கட்சிக்கு, நீங்கள் பெரும்பான்மை பெற்ற சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு நாம் ஆதரவை வழங்குவோம், அதையும் தாண்டி தேவை ஏற்பட்டால் வேறு சபைகளிலும் ஆட்சி அமைக்க விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்வோம் என பகிரங்கமாக கூறினோம்.

ஆனாலும், தமிழ் அரசுக் கட்சி அதை பொருட்படுத்தாது ஒன்றிணைவுக்கு மறுத்த நிலையில் தமிழ் மக்கள் பேரவை மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் நாம் பல சபைகளில் ஒன்று இணைந்து ஆட்சி அமைத்தோம்.

இந்த இணைவு தொடர வேண்டும் என்பதே எனது நிலைப்பாட இருக்கின்ற நிலையில் அரசியல் நீதியான இணக்கப்பாட்டை தாண்டி தமிழ் மக்களின் கொள்கைக்கான ஓர் இணக்கப்பாடாக தமிழ் அரசு கட்சியும் இணைந்து கொள்ள வேண்டும்.

தமிழ் அரசின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானத்தை நான் தேடி சென்று ஓரணியில் செயல்படுவதற்கான அழைப்பை விடுத்த போது, வரஇருக்கின்ற ஏக்கிய ராஜ்ஜிய ஒற்றையாட்சி அரசமைப்பை தான் நிராகரிப்பதாக தெரிவித்தார்.

ஆனால், அதன் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதற்கான ஓர் ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் தமிழ் அரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்கிய போதும் உள்ளூராட்சி மன்ற ஒற்றுமை கூட்டுக்குள் அவர்கள் வரவில்லை.

அப்போது தான் தமிழ் அரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார் ஏக்கிய ராஜ்ஜிய அரசமைப்பை உருவாக்குவதில் தமிழ் அரசு கட்சிக்கு அதிக பங்கு இருந்தது.

நீங்கள் உள்ளூராட்சி சபை இணக்கப்பாட்டில் ஏக்கிய ராஜ்ஜியவை நிராகரிப்போம் எனக் கூறிய நிலையில் நாங்கள் கொண்டு வந்ததை நாங்களே வேண்டாம் என கையெழுத்து இடுவதா என்ற குழப்பத்தில் நிராகரித்து இருக்கக் கூடும் எனத் தெரிவித்தார்.

அப்போது நான் தெரிவித்தேன், சரி பரவாயில்லை இணக்கப்பாட்டுக்கு வாருங்கள், ஏதாவது இரகசியமான முறையில் சில விடயங்களை பாதுகாக்க வேண்டுமானாலும் அதை நான் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன். வாருங்கள் என்றேன் வரவில்லை."- என்றார். (எ)

# ஜகத் எம்.பியின் மகன் ரசிகவுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 21

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகன் ரசிக விதானவை ஒகஸ்ட் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மத்துகம நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று மத்துகம நீதிவான் அசங்க ஹெட்டியாவத்த முன்னிலையில் அவர் முற்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

போலித் தரவுகளுடன் பதிவு செய்யப்பட்ட ஜீப் வண்டி ஒன்று தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபருக்கு கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து, வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைவாக சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். இந்த நிலையில் ரசிக விதானவை ஒகஸ்ட் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (எ)

# வரி செலுத்தாமல் கொண்டு வந்த சிகரெட்களுடன் சீன பிரஜை கைது

கொழும்பு, ஜூலை 21

வரி செலுத்தாமல் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 600 சிகரெட்களை வைத்திருந்த சீன நாட்டவர் ஒருவர் நேற்று கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசேட சோதனையின் போதே குறித்த சிகரெட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபர் 40 வயதுடைய சீன நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கிளிநொச்சியில் இராணுவ சிப்பாய் கஞ்சாவுடன் கைது

கிளிநொச்சி, ஜூலை 21

கிளிநொச்சி இரணைமடு பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் உயர் அதிகாரிகளால் இராணுவ சிப்பாய் ஒருவர் 20 கிராமம் 320 மில்லி கிராம் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்

கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் நேற்றைய தினம் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்

பொலிஸார் கிளிநொச்சி நீதிவான் முன் முற்படுத்திய நிலையில் இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்

இந்தச் சம்பம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருளை முற்றாக தவிர்க்கும் செயல் திட்டம்!




யாழ்ப்பாணம், ஜூலை 21

கோப்பாய் பொலிஸாருடன் இணைந்து ஐ. எம். சி. நிறுவனத்தினர் பல விழிப்புணர்வு செயல் திட்டங்களை நடத்தி வருகின்றனர். அந்த வகையில் நேற்றைய தினம் கே. எஸ். வை. அம்பாள் கட்டட ஒபந்தக்காரர் அனுசரணையில் பலாலி வீதி கோண்டாவில் அம்மாச்சி உணவகத்துக்கு முன்பாக "போதையற்ற நாட்டைக் கட்டி எழுப்புவது எமது நோக்கமாகும்" என்ற

தலைபில் போதைப் பொருள் விழிப்புணர்வு பதாகை பொலிஸாருடன் இணைந்து காட்சிப் படுத்தப்பட்டது.

# வவுனியா மாநகர சபை பழிவாங்கல்: தொடர்ச்சியாக வியாபாரத்துக்கு தடை

வவுனியா, ஜூலை 21

வவுனியா மாநகர சபை நிர்வாகம் தொடர்ச்சியான பழிவாங்கலை மேற்கொண்டு தொழில் செய்வதற்கு இடையூறு ஏற்படுத்துவதாக இலங்கை தொழிலாளர் கட்சியின் வவுனியா மாநகர சபை உறுப்பினர் பாருக் பர்ஸ்சான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வவுனியா மாநகர சபைக்குட்பட்ட மாடு அறுக்கும் மடுவம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"கடந்த மூன்று நாட்களாக மடுவத்துக்கான மின்சாரம் வழங்கப்படவில்லை. அரசியல் பழிவாங்கல் அடிப்படையிலேயே இவ்வாறு செய்யப்படுகின்றது. இதனால் எமது தொழில் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகமான வியாபாரம் செய்யக்கூடிய ஒரு நாள். ஆனால், இறைச்சிக்கடைகள் அனைத்தையும் மூடவேண்டிய அவல நிலைக்கு வந்துள்ளோம்.

மாவட்டத்தில் உள்ள உணவகங்களுக்கும் இறைச்சியை வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதுவரை காலமும் இப்படியான ஒரு பிரச்னை வந்ததில்லை. இதனை நம்பி தொழில் செய்யும் பல ஊழியர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, எமக்கு சரியான - நீதியான தீர்வு வழங்கப்பட வேண்டும்".- என்றார். (எ-10)

### மன்னார் விடத்தல் தீவு கடற்கரையில்

# படகு மற்றும் வெளியிணைப்பு இயந்திரம் தீ வைத்து எரிப்பு!

மன்னார், ஜூலை 21

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தின் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீனவர் ஒருவருடைய பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடிப் படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் என்பன கடலில் வைத்து எரியூட்டப்பட்ட நிலையில் அடம்பன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விடத்தல் தீவு கடற்கரையில் கடந்த சில தினங்களாக நிறுத்தி வைக்கப்பட்ட மீன்பிடி படகின் வெளி இணைப்பு இயந்திரம் இனம் தெரியாத நபர்களால் இரவு நேரங்களில் கடலில் தூக்கி வீசப்பட்டு வந்த நிலையில், குறித்த வெளி இணைப்பு இயந்திரங்களை மீட்டு மீனவர்கள் கடல் தொழிலுக்குச் சென்று வந்துள்ளனர்.

இந்த நிலையில் விடத்தல் தீவு மேற்கு மீனவ கூட்டுறவு சங்கத்தின் பொருளாளர் கடந்த வெள்ளிக் கிழமை மீன் பிடிக்க கடலுக்குச் சென்று மீண்டும் படகு விடத்தல் தீவு கடற்கரையில் கட்டப்பட்டது. குறித்த படகில் பெறுமதியான வெளி இணைப்பு இயந்திரமும் பொருத்தப்பட்டிருந்தது.

சனிக்கிழமை காலை மீண்டும் தொழிலுக்குச் செல்ல குறித்த படகின் உரிமையாளர் கடற்கரைக்குச் சென்ற போது படகை காணவில்லை.

இதன் போது குறித்த படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவை சற்று தொலைவில் எரியூட்டப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டன.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மீனவர் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் அடம்பன் பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பின்னர் தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் குறித்த பகுதிக்கு சென்று எரியூட்டப்பட்ட படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவற்றை பார்வையிட்டதோடு, விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சம்பவம் விடத்தல் தீவு மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.